# குன்றின் குரல்

ஆண்டு 18 ஜனவரி - ஏப்ரல் இதழ் 1



## தொலை தூர சுதந்திரம்

பாலரஞ்சினி சர்மா

என்ன செய்வது?
இதுதான்விதியெனில்
என் செய்வது?
நம் வாழ்வென்பது
இரத்தம் சிந்தவென
படைக்கப்பட்ட தன்
குறியீடுதானே
நேநீர் சாயம்?

உழைத்துக் களைத்துப் போன
நாமும் நம் மூதாதையரும்
உருக்குலைந்து போயிடினும்
செழித்திருந்த தேயிலைச்
செடிகளின்
வாழ்வைத்தானே
நாம் நம் வாழ்வாய்
கொண்டோம்!
தழைத்த தேயிலையால்
நம் வாழ்வ;ம்
தழைத்திருந்தது!
இப்போ....
தனியார் வசப்பட்டதால்
தளர்ந்து போன
தேயிலைச் செடிகளும்
நாமுமாய்...
வாழ்வ; தந்த ஜீவன்களின்
வாடலைக் காணச் சகியா

தொடர்ச்சி 23ம் பக்கம்.....

**10/= மலையகத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத மனிதர்கள்

மலையக கவிதைகள் பற்றி பேசுபவர்கள் மலையக மக்கள் இங்கு வருகை தந்த பொழுது கொண்டு வந்த நாட்டார் பாடல்களைப் பற்றி குறிப்பிடுவார்கள். அது பின்னர் மலையகநாட்டார் பாடல்கள் மலர்ந்ததைப் பற்றி பெருமையுடன் பேசுவார்கள்.

அதன் பிறகு அறுபதுகளில் எழுதிய கவிதைகளைப் பற்றியே குறிப்பிடுவார்கள் ஆனால் அதன் இடைக்காலப்பகுதியில் படிப்பறிவில் மிகவும் குறைந்திருந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்களிடையே பாடல்கள் எழுதி பணிபுரிந்த இலக்கிய கர்த்தாக்களைப் பற்றிக் குறிப்பிட மறந்து விடுவார்கள்.

பாமரத் தமிழில் பாடல்களை எழுதிய பாட்டாளி கவிஞர்கள் 1960வரையிலும் மலையகத் தோட்டப் பகுதியில் இருந்திருக்கின்றனர். நாட்டார் பாடல் வடிவில் இருந்த மலையக கவிதை இலக்கியத்தை நவீன கவிதை இலக்கியத்துக்கு இட்டு இடைவெளியை நிரப்பியவர்கள் இவர்கள் தாம். கவிதைக்கும் பாடல்களுக்கும் மத்தியில் கவிதையா பாடலா என்ற மயக்கம் ஏற்படும் விதத்தில் தமது உணர்ச்சிகளுக்கு எழுத்துருவம் கொடுத்தவர்கள் இவர்கள்.

இவர்களில் மிக முக்கியமானவ வி. எஸ். கோவிந்தசாமி தேவர். எட்டியாந்தோட்டையிலிருந்து ஐம்பதுகளில் தோட்டம் தோட்டமாகச் சென்று தான் இயற்றிய பாடல்களை பாட்டு புத்தகமாக அச்சிட்டு பாடி, மக்களின் முன்னேற்றத்துக்காக செயற்பட்டவர்களில் முக்கியமான ஒருவர். எஸ். கோவிந்தசாமி தேவர். இவரது பாட்டுப் புத்தகங்களில் ஆயிரக்கணக்கில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

பிரஜா உரிமைக் குரல் ( 1ம் பாகம்) பிரஜா உரிமைக்குரல் ( 2ம் பாகம்) வெங்கல முரசு (1ம் பாகம்)தோட்டத் தொழிலாளர் குரல், ஜேத்திர கும்மி, வீரதமிழ் முரசு, இலட்சிய முழக்கம், தமிழ் மணி முரசு ஆகிய தலைப்புக்களில் பாடல்களை அச்சிட்டுள்ளார்.

பிரஜா உரிமைக்குரல் என்ற பாட்டுப் புத்தகத்தில்

**தோட்டக் காட்டிலே உழைக்கும்**
**பாட்டாளி மக்களுக்கு**
**ஓட்டுப் பிரஜா உரிமை இல்லாயாம்**
**கேட்டாலும் மக்களுக்கு**
**தொல்லையாம்**

**மேலும் அந்தப் பாடலில்**
**காடு மலை கானுவெட்ட**
**ஓடி ஓடி முள்ளி குத்தி**
**தேடி உழைத்தும் வயிறு கட்டளை**
**தேறுதல் பிரஜா உரிமை கிட்டள**



**கோவிந்தசாமி தேவர்**

என்று கோபத்துடன் குறிப்பிடுகின்றார்.

தமிழ் மணி முரசு என்ற பாட்டுப் புத்தகத்தில் தொழிலாளர் படுந்துயரம் என்ற தலைப்பில்

**ஆறுமணியாகு முன்னே**
**அடிச்சிடுவாங்க தப்பு**
**அரண்டுருவண்டு எழுந்திருப்பார்**
**தொழிலாளர் மக்கள்**

என வி. எஸ். கோவிநதசாமித்தேவர் பாடுகிறார். தமிழ் மணி முரசு என்ற இந்தப் பாடல் புத்தகம் 13. 4. 1956ல் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. பன்னிரண்டு பக்கங்களுடன் வெளிவந்துள்ள இந்த பாட்டுப் புத்தகம் 25 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

1ம் பக்க தொடர்ச்சி...

## தொலைதூர ..................

மனசோடு நாம்!
வதங்கி நிற்கின்ற செடியில்
கை வைக்கின்ற கணம்
வறண்டு போன
தாயின் மார்பில்
உதிரத்தையாவது
உறிஞ்சிக் குடிக்க விழையும்
எதியோப்பிய குழந்தையாய்
என்னை உருவகித்து
குறுகிப் போகின்றெதன் மனசு!
உண்மைதான்
தேநீரின் சிவப்பு
தேயிலைச் செடிகளின்
இரத்தக் கண்ணீரே தான்
ஏணிகளாய்
நம்மை கருதிய
காலம் போய்
செடிகளை ஏணியாக்கி
சுகம் காணும்
முதலாளிகள் உள்ளவரை
அட,
வாடி வதங்கும்
செடிகளை
வருடிவிட வேணும்
சுதந்திரமில்லாத
நமக்கு ஏனய்யா
சுதந்திரப் பொன்விழா?!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மூன்றாம் உலக பார்வை

செம்மையான சட்ட முறையும், நீண்ட காலமாய் இருந்து வருகின்ற நீதித்துறையும், செயல்பாடுமிக்க காவல் துறையும், பண்பாட்டு நிறுவனங்களின் தொடர்பும் தொழில் வளர்ச்சியும் கொண்ட மிக முன்னேறிய சமுதாயம் ஒன்றிற்கான மனித உரிமைக் கோட்பாடுகளிலிருந்து வேறுப்பட்ட கோட்பாடுகள் தனித்து நின்று, வறுமையில் வாடும் விவசாயம் சார்ந்த சமுதாயத்திற்கு தேவைப்படுகின்றது.

பல மூன்றாம் உலக அறிஞர்களின் கருத்து இதுதான். அவர்களின் கருத்துப்படி, வழிவழியாக மரபுகளில் ஊறிப்போன ஏழைச் சமுதாயங்களில் மனித உரிமைகள் அர்த்தமே மாறிப்போய் விடுகின்றது. பன்னாட்டு அறிக்கைகளிலும், மலைநாடுகளிலும் பேசப்படும் மனித உரிமைகள் மனிதனின் பிறப்புரிமை பற்றியவையே. இருப்பினும் அவற்றை ஒரு குறிப்பிட்ட சமூகத்தோ'டு பொருத்திப் பார்க்கின்ற போது அவற்றின் சாரமாக இருப்பது அச்சமுதாயத்தின் அமைப்பேதானே தவிர இயற்கையான அடிப்படை நீதி அல்ல. இவை இம்மனித உரிமை களை நெறிப்படுத்தி நடை முறைக்கு கொண்டு வருகிற அந்த குறிப்பிட்ட சமுதாயத்தின் இயல்பைச் சார்ந்தவையே. எனவே தான் ஆசிய நாடுகளுக்கான கோட்பாடுகளை உருவாக்கும் பலரும் மனித உரிமைகள் மேலை நாடுகளுக்கே பொருத்தமானவை என்றும் வளரும் நாடுகளுக்கு பொருத்தமற்றவை என்றும் கருதுகின்றனர். இதனால் தான் ஆசியாவில் உள்ள மாணவர்களில் சட்டம் பயிலும் மாணவர்களை தவிர பிறர், பொரும்பாலும் மனித உரிமை குறித்த முறையான கல்வியை பெறுவதில்லை.

மனித உரிமைகளின் சிறப்புகளை ஆசியாவின் கோட்பாடுகளை உருவாக்குபவர்கள் யாரும் மறுப்பது இல்லைதான். ஆனாலும் பலரும் பல்வேறு முறைகளில் அர்த்தப்படுத்திக் கொள்வதற்கு அவை இடமளிப்பதால் குறிப்பிட்ட சமூக, அரசியல் பொருளாதார சூழலைக் கணக்கி லெடுத்துக் கொள்ளாமலிருப்பது பிழை என்று அவர்கள் நினைக்கின்றார்கள்.

வழிவழியாக வரும் பரம்பரை பண்பாட்டைப்பற்றி ஆசிய மக்கள் பெருமையுடையவர்கள். காலனியா திக்கத்தை எதிர்த்த இயக்கத்தில் மனித உரிமைகள் குறித்த எண்ணங்களும் இடம் பெற்றன என்பதே எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர்.

**ராதிகா குமாரசுவாமி**

ஆயினும் தனிமனிதனின் சிறப்பு, சமத்துவம், நீதி, வறுமையிலிருந்து விடுதலை போன்ற வற்றிற்கு தரப்படும் அர்த்தங்களை பார்க்கின்றபோது அவை மேலை நாடுகளிலிருந்து இறக்குமதியான வையே என்று பலர் கருதுகின்றனர். எனவே மனித உரிமை என்பது தனித்தனியாக அர்த்தங்களைக் கொண்டது என்று எடுத்துக் காட்டுவது எளிதல்ல. மனித உரிமைகளுக்கு ஆசியாவுக்கான ஒரு அர்த்தத்தைத் தருவது இன்று தேவைப்படுகின்றது.

ஆசியாவின் கோட்பாடுகளை உருவாக்குபவர்களின் இன்னொரு கருத்து தீவிரமான வறுமை மனித உரிமைகள் செயல்படுத்தப் படுவதைத் தடுக்கின்றது. உயிர் வாழும் என்று என்கின்ற நிலையிலிருந்து முன்னேறி, மனிதன் என்னும் சிறப்பை அடைவதற்கு ஓரளாவாவது பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டும். எனவே, மனிதன் உயிரோடிருக்கும் உரிமை மட்டுமன்றி, அவன் மனிதனாகவும் இருப்பதற்கான உரிமையும் மிக ஒன்றாக இருக்கின்றது. இந்த உரிமை கிடைத்த அடிப்படையான பிறகுதான் பன்னாட்டு அறிஞர்கள் சொல்கின்ற உரிமைகள் குறித்து யோசிக்க முடியும்.

இத்தடைகள் நீங்கி மனித உரிமை களைப் பொருளாதார வளர்ச்சியோடு இணக்க வேண்டியது ஆசிய நாடுகளின் தேவையான ஒன்றாகும். இது திட்டமிட்ட சமுதாய வளர்ச்சியின் ஒரு பகுதியாக இருந்தே தீர வேண்டும். அரசாங்கத்தின் அதிகாரம் வறுமையைப்போக்கப் பயன்பட வேண்டும். என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

கல்வி வளர்ச்சி குறித்த திட்டங்களின் மூலமாகத்தான் மனித உரிமைகள் ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற வகையில் இடம் பெற முடியும். இக்கருத்து தொழில் நுட்பம் சார்ந்த பயன்பாடு அற்றது என்பதனால் தள்ளி வைக்கப்படு கின்றது. மாணவர்கள் பல்வேறு துறைகளில் அறிவு வளர்ச்சி அடைய வேண்டும் என்பதும், வளர்ச்சி போக்கில் வாழ்க்கைக் கூறுகள் பலவும் ஒன்று சேர வேண்டும் என்பதும் இப்போது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. இதனால் பொருளாதார வளர்ச்சிக்காக தரப்படும் முக்கியத்துவத்துடன், சமூக, அரசியல் முன்னேற்றத்துக்கும் உதவக் கூடிய கல்வி வளர்ச்சியும் இருக்க வேண்டும் எனும் கருத்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மனித உரிமைகள் பற்றி ஆராய்ச்சி பிறஇனத்தவர்களுக்கு எதிரான செயல்பாடுகள், பெண் விடுதலை எதிக்கும் செயல்பாடுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வு குறித்த அடிப்படையான கருத்துக்கள் ஆகிய வற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு செயற்படவேண்டும். இவ்வாராய்ச்சி களில் மனித உரிமைகள் குறித்த ஆசிய மக்களின் மதிப்பீடுகளும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படவேண்டும். அப்போது தான் ஆசிய கண்டத்தில் மனித உரிமைகள் குறித்த மக்களின் கருத்து என்ன என்பதை அறிய முடியும். இது குறித்த ஞானம் எதிர் காலத்திட்டங் களைத் தீட்ட மிகவும் உதவியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக கல்வியின் தடைபாடுகள்

நா. ஹரிதர்

ஒரு சமூகம் முன்னேற்றமடைந்து காணப்பட வேண்டுமாயின் அது கட்டாயம் கல்வியில் முன்னேற்ற மடைந்து காணப்பட வேண்டும். ஏனெனில் கல்வி எனும் விளக்கொளியின் மூலமே ஒரு சமூகத்தில் காணப்படும் அறியாமை எனும் இருளினை அகற்ற முடியும். அத்தோடு சமூகத்தில் காணப்படும் குறைப்பாடுகளை நீக்க சிந்தனையுடன் செயலினை மேற்கொள்ள இந்த கல்வியே சிறந்த ஒரு சாதனம் என்றாலும் அது மிகையாகாது. இன்று இலங்கையை பொறுத்தவரை கல்வித்துறையில் கணிசமான வளர்ச்சி ஏற்பட்டாலும் மலையக மக்களின் கல்வி நிலைமை மிகவும் பின்தங்கிய நிலையிலே உள்ளது. இது இவ்வாறு பின்தங்கி காணப்படுவதற்கு பல காரணிகளை நாம் அடையாளப் படுத்தலாம்.

மலையக சமூகத்தவர் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு பெருந்தோட்டங்களை அமைப்பதற்காகவே அழைத்து வரப்பட்டனர். இத்தகைய கட்டத்தில் மிகவும் சொற்ப தொகையினரே கல்வி கற்பவர்களாகவே இருந்தனர். ஏனெனில் இவர்கள் அனைவரும் நாட்கூலிக்கு வேலை செய்யும் சாதாரண தொழிலாளர்களாகவே இருந்தனர். அத்தோடு அவர்கள் அனைவரும் அழைத்து வரப்பட்டதன் பிரதான நோக்கம் பெருந் தோட்டங்களை அமைப்பதுவே ஆகும். இதன் விளைவாகவே சொற்ப அளவு பிள்ளைகளையே கல்வி கற்க செய்ததுடன் தமது பரம்பரையினர் தொடர்ந்து பெருந்தோட்டங்களை அமைக்க வேண்டும். என்ற குறுகிய நோக்கத்துடன் அவர்கள் அழைத்து வரப்பட்டதனால் அவர்கள் கல்வியில் செலுத்திய் அக்கறை மிக குறைவாகவே காணப்பட்டது. இது மலையக கல்வியின் ஆரம்ப கால கட்டத்தில் காணப்பட்ட ஒரு பிரதான தடையாகும். 1971 ஆம் ஆண்டு தொடக்கம் 1977 வரை ஏற்பட்ட பஞ்சமும் ஒரு பிரதான காரணம். மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்கு தடையாக இருந்த தென்லாம்.

அடுத்து மலையகத்தில் சிறந்த வசதிகளைக் கொண்ட (இடவசதி, மைதானம், ஆய்வுக்கூடம், வாசிக சாலை) பாடசாலைகள் அரிதாகவே காணப்படுகின்றது. அத்துடன் மலையகத்தில் காணப்படுகின்ற தேசிய பாடசாலைகள் அரிதாகவே இருக்கின்றன. அத்துடன் மலைய கத்தில் காணப்படுகின்ற தேசிய பாடசாலைகள் பெயரளவில் மட்டுமே தேசிய பாடசாலைகளாக உள்ளதே தவிர வசதிகளில் சாதாரண பாடசாலைகளாகவே உள்ளன. பாடசாலைக்கு கிடைக்க வேண்டிய வசதிகள் எதுவும் பூரணமாக கிடைக்காமல் அதனை போராடி பெறவேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது. உதாரணமாக அண்மையில் பசறை தேசிய பாடசாலை மைதானத்திற்காக ஒதுக்கிய 2 ஏக்கர் காணியினை போராடி பெறவேண்டிய நிலைமை காணப்பட்டதனை குறிப்பிடலாம். இவ்வாறு வசதிகள் குறைந்த பாடசாலைகள் மூலம் பெருமளவிலான சிறந்த கல்விமான்களை உருவாக்க முடியாத நிலைமையினை அவதானிக் கலாம்.

அண்மையில் மலையகத்திலிருந்து ஏராளமான ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டது மிகவும் சந்தோஷமான விடயமே, எனினும் இவர்களில் பெரும்பாலானோர் சா.த. உ.தர தகைமையினே கொண்டுள்ளனர். இவர்களில் உயர் வகுப்புகளுக்கு கற்பிக்க முடியாத நிலைமையுள்ளது. இவர்கள் தமது தகைமையினைக் கூட்டிக்கொள்ள விருப்பமின்றி இருப்பதுடன் அதற்கான வசதி வாய்ப்புகளும் குறைவாகவே காணப்படுகின்றன. ஒரு சிலர் பாடசாலை மாணவர் மீதும், ஒழுக்க நடவடிக்கை மீதும் அக்கரையின்றி இருப்பதனை காணக்கூடியதாக வுள்ளது. அதாவது ஆசிரியர்களின் நடத்தைகள் பிழையாதென ஆசிரியர்களுக்கெதிராக போராட்டம் செய்யும் மாணவர்கள் உருவாகி வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இது வேதனையானது. எமது சமூகமே எமது மாணவர்கள் மீது இவ்வாறு அக்கறையின்றி நடப்பது மலையகக் கல்வி வளர்ச்சியின் பிரதான தடை எனலாம்.

மலையக சமூகம் தனியே தமிழர்களை மட்டும் கொண்ட ஒரு சமூக அமைப்பல்ல. கணிசமான அளவு சிங்களவர்களும், முஸ்லீம்களும், வாழ்கின்றனர். இதனால் இங்கு காணப்படும் சிங்கள பாடசாலைகள் வசதி வாய்ப்பு நிறைந்து காணப்படுகின்றன. எனவே இப்பகுதியிலிருந்து பல்கலைகழக வெட்டுப்புள்ளி நிர்ணயிக்கப்படும் போது இந்த பாடசாலைகளை கவனத்திற் கொண்டே நிர்ணயிக்கின்றனர். எனவே இதனால் வசதி குறைந்த மலையக தமிழ் பாடசாலையின் மாணவர்கள் பெரிதும் பாதிப்பு அடைகின்றனர். குறிப்பாக பதுளை, நாவலப்பிட்டி, கண்டி போன்ற பிரதேசங்களில் அந்நிலை மிகவும் மோசமாக இருப்பதனை அவதானிக்க கூடியதாக உள்ளது. இது மலையக மாணவர்களின் உயர் கல்வியினை தொடர சிக்கலாக அமைகின்றது.

ஆசிரியர் பற்றாக்குறை ஆரம்பம் முதல் இன்றுவரை நிரப்பப்படாத பிரச்சினையாகவே உள்ளது. ஆரம்பத்தில் மலையகத்தில் போதிய கல்வி கற்றவர்கள் இல்லையென்பதை காரணம் காட்டி வெளியிடங்களில் இருந்து மலையகப் பாடசாலைக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள் இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் ஒரு சிலரை தவிர மற்றைய அனைவரும் இம்மலையக பாடசாலைகளை ஒரு பயிற்சி களமாக பயன்படுத்தியதுடன் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை விட்டு ஓரிரண்டு வருடங்கள் மட்டும் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்வதும் மலையக கல்விக்கு மிக முக்கிய தடையாக அமைந்ததை நாம் மறந்து விடமுடியாது.

மலையகத்தினை பொறுத்தவரை ஆரம்ப கல்வி ஒரு மன்னேற்றம் அடைந்த நிலையிற் காணப்படுகின்றது. ஆண்டு - 05 புலமைப் பரீட்சைப் போன்றவற்றில் கணிசமான அளவு மாணவர்கள் சித்திப்பெற்று விடுவதனை காணக்கூடியதாக வுள்ளது. ஆனால் உயர் கல்வியில் சித்தியடையும் மலையக மாணவர்களின் எண்ணிக்கை மிக குறைவாகவே உள்ளது. இதற்கு பல்வேறு காரணங்களை அடையாளப்படுத்தினாலும் மாணவர்களின் ஆர்வமின்மை ஒரு பிரதான காரணியென குறிப்பிடலாம்.

இவ்வாறான காரணங்கள் மலையக கல்வி வளர்ச்சிக்கு பிரதான தடைகளாக உள்ளன. இந்த தடைகள் இனிவரும் காலங்களில் களையப்படுமாயின் அது மிகவும் சந்தோஷத்தை தரும். இவ்வாறான பல தடைகள் இருந்தாலும் எதிர்நீச்சல் போடும் மலையகத்திலிருந்து சிறந்த கல்விமான்கள் உருவாகி இருப்பதை நாம் மறந்து விடமுடியாது. மேலும் ஒரு சமூகத்தை அறிவுக் கண்ணோடு நோக்கின் சிறந்த சிந்தனையுள்ள கல்வி மான்களை உருவாக்குவதில் ஆசிரியத் தொழிலுக்கு நிகரான தொழில் எதுவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# செந்தாமரை

□ அக்னஸ் சவரிமுத்து □

அன்று சனிக்கிழமை. காலையில் காய்கறித் தோட்டத்தில் சிறிது வேலை செய்துவிட்டு குளித்து, பகல் உணவை உண்டு, சற்று ஓய்ந்து மாலை மூன்று மணியளவில் வீட்டிலுள்ள தனது காரியாலயத்தில் சில கோவைகளை அடுக்கி வைத்துவிட்டு புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு செயலமர்வு நடத்துவது சம்பந்தமாக கல்வித் திணைக்கள உத்தியோகஸ்தர்களுக்கு ஆலோசனை வழங்குவது பற்றிய சில திட்ட வேலைகளைச் செய்து கொண்டிருந்தார் கல்விப் பணிப்பாளர் பரசுராமன்.

"தோட்டக்காரன் இருக்கிறானே, தோட்டத்தப் பராமரிக்க நீங்க எதுக்காக அந்த வேலையைச் செய்யிறீக"? யாரும் பார்த்தா என்ன நினைப்பாங்க"

என்றும் அவரது மனைவி கேட்டுவிட்டால் " யார் என்ன நினைத்தால் நமக்கென்ன இந்த மாதிரி வேலைளச் செய்தா உடம்புக்கு சிறந்த பயிற்சியாய் இருக்குமே "

என்று நாசுக்காக பதில் கூறிவிடுவார்.

வீட்டில் இருந்தாலும் தனக்கென ஒரு வேலைத்திட்டத்தை ஏற்பத்திக் கொண்டு ஓய்வின்றி தனக்குரிய வேலைகளைச் செய்துகொண்டேயிருப்பார்.

லீவு நாட்களில் சுவாரசியமான நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவதோ, ஏனைய சில செல்வந்தர்கள் கேளிக்கைகளில் பங்கு கொண்டு உல்லாச வாழ்வு நடத்துவது போன்ற விடயங்களிலோ அக்கரை கொள்ளாதவர். உற்றார் உறவு முறை என்பவைகளெல்லாம் எட்டாத தூரமாய் இருந்தன அவருக்கு எப்பொழுதும் கருமமே கண்ணென்று கருதும் கண்ணியமிக்க ஒரு பெரிய மனிதன் அவர்.

மனைவி மரகதம் தேனீரையும் கொறிக்கும் சிறு உணவையும் அவர் முன்னிலையில் வைத்துவிட்டு கணவனை வழமையாய் அழைக்கும் பணியில் " ஐயா தேனீர் குடிங்க" என்று கூறிவிட்டு அவரது வேலைகளை குழப்ப விரும்பாது சென்றுவிட்டார்.

சிற்றுண்டியை சிறிது கொறித்துவிட்டு தேனீரைப் பருகிக் கொண்டிருந்த அவரிடம் அவரது மூத்த மகன் மேனன் ஒடி வந்து.

"அப்பா, யாரோ ஒரு பிச்சைக்காரக் கிழவன் நம்ம வீட்டு கேட்டுக்கருகில் வந்து நின்றுகிட்டு உங்க பேரைச் சொல்லி கேட்குறான் ............பா.

"யாரது? என் பெயரைச் சொல்லி கேட்கிறானா? ஏப்படி கேட்டான் "?

"பரசுராம் தம்பி இருக்கிறாரா .............ப்பா..........ன்னு கேட்டான்." எனக்கு சரியான கோவம் வந்திருச்சி போடான்னு வெரட்டுனேன் அ வெ....ன் போகமாட்டேங்கிறாப்பா".

என் பெயரைச் சொல்லி யழைப்பதாய் இருந்தால் யாராக இருக்கும் என்று யோசித்தவாரே வெளியே சென்று பார்த்தார்.

எழுபது வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர் ஒட்டிய கன்னம், எழும்பு கூடுகளின் வடிவத்தை எளிதாய் எடுத்துக் காட்டும் உடல் அமைப்பு, ஒளி குன்றிய கண்கள், இரண்டு மூன்று வாரங்கள் தொடர்ந்து சவரம் செய்யப்படாத முகம், தும்பைப் பூ மயிர்கள், தலையில் சுருண்டும் ஒழுங்கற்றும் வளர்ச்சி குன்றி தலையோடு ஒட்டிக்கிடந்தன, அழுக்குப் படிந்த சாரம், அவர் அணிந்திருந்த கமிசு கோடிட்டதானாலும் அழுக்கும், பல நாள் படிந்திருந்த கரைகளும் அக்கோடுகளை மங்கச் செய்திருந்தன.

"எங்கோ பார்த்த ஞாபகம் ". யோசித்தவாறே நினைவை மீட்டிக்கொண்டிருந்தார் பரசுராமன்.

"என்னப்பா யோசிக்கிறீங்க, என்னத் தெரிலயா? நா........... நாந்தா....ன் அழகமுத்து, வெள்ளவத்த பேக்கரியில வேல செஞ்சேனே பரசுராம் தம்பி தானே நீங்க ". இத்தனை வயதிலும் தெளிவாகக் கேட்டார் அந்தப் பெரியவர்.

பரசுராமன் அதிர்ந்து போனார் பிச்சைக்கார கோலத்திலிருந்த அந்த மனிதரை அப்படியே அணைத்துக்கொண்டார். அவரது கைகளைப் பிடித்து வீட்டுக்குள் அழைத்து வந்தார். வாசற்படியில் அவர்கள் நுழைந்ததுமே பரசுராமன் அந்தப் பெரிய மனிதரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழுந்தார். அவரது இரு கரங்களையும் அன்போடு பற்றிவந்து அப்படியே கதிரையில் அமரச் செய்தார்.

மனைவியும், க.பொ.த (உயர்தரம்) கற்றுக்கொண்டிக்கும் அவரது மகனும், ஆண்டு ஒன்பதில் பயிலும் அவரது மகள் இந்துஜாவும் அறுவருப்புடனும், ஆச்சரியத்துடனும் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காரணம் உறவு முறையென்று சொல்லிக்கொள்ள யாருமற்ற அநாதையென்று அவர்கள் யாவரிடமும் தன்னைப்பற்றி சொல்லிவைத்திருந்தார் பரசுராமன். இருந்தும் இவரது நற்குணத்தையும், உயர் நிலையையும் கண்ட மரகதத்தின் பெற்றோர் நிறைய சொத்துக்களுடன் பணிப்பாளர் பரசுராமனுக்கு மரகதத்தை திருமனம் செய்து வைத்தார்கள். மரகதத்தின் தந்தை கண்டியில் பிரசித்த பெற்ற ஒரு வர்த்தகர். நிறைய சொத்துக்களுக்கு அதிபதியாய் இருந்தார். பிறந்த இடத்திலும் புகுந்த இடத்திலும் உயர்ந்த நிலையில் வளர்ந்து வந்த மரகதத்திற்கும். தற்போது அவரது பிள்ளைகளுக்கும் "இந்த ஏழை யார் " என்று அறிந்து கொள்வதில் பெரும் பரபரப்பும் அவசரமும் ஏற்பட்டது.

பத்து வயதுச் சிறுவன். தினமும் பாண் வாங்கும் கஸ்ரமர் அவன், வெள்ளவத்தையில் கடற்கரையை அண்மித்தாற்போல் ஒரு பெரிய பங்களாவில் எஞ்சினியராகவிருந்த ஒருவரின் பணக்கார குடும்பத்தில் வேலைக்காரச் சிறுவனாக இருப்பவன், அந்த வீட்டுக் குழந்தைகளை நேரத்திற்கு பள்ளியில் சேர்ப்பது பாடசாலை முடிந்ததும் அவர்களை வீட்டுக்கு அழைத்து வருவது, பேக்கரிக்கு சென்று பாண் வாங்குவது . மற்றும் சமையற்காரனுக்கு அவ்வப்போது உதவுவது இத்தியாதி பொறுப்பு அவனுக்கு. அது ஒரு சிங்கள குடும்பமாகவிருந்தபடியால் மிகத் தெளிவாக சிங்களம் பேசக் கற்றுக்கொன்டிருத்தான் அந்தப் பையன். துள்ளித்திரியும் பள்ளிப்பருவத்தில் சிறைகைதியாக, இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்த அந்தப் பிஞ்சு உருவம் பேக்கரிக்கு வருவதால் அங்கு பாண் தயாரிக்கும் அழகமுத்துவுடன் பழக்கம் ஏற்பட்டு தினமும் அவனுடன் சிறிது அளவளாவி கேலி பேசி விளையாடிவிட்டுச் செல்லும் வழக்கம் அவனது எஜமானுக்குத் தெரியாத இரகசியம்

ஆயினும், அழகமுத்து ஒரு தமிழன் என்ற விடயம் பையனுக்குத் தெரியாது. ஒரு நாள் அழகமுத்து சாமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுவதற்காக வாங்கப்பட்ட சில பழைய புத்தகங்களை மேசையில் வைத்து அடுக்கிக்கொண்டிருந்த வேளையில் ஐந்தாம் வகுப்பு 'பாலபோதினி' புத்தகத்தில் ஏடுகள் கிழிக்கப்படும் பக்கவாட்டில் வண்டுகள் சிறிது அரித்தும் இருந்ததை அவன் உற்று நோக்கினான். 'நிலத்தைப் பண்படுத்தல் ' என்ற பாடம் தென்பட எதையும் எதிர்பாராது விருட்டென்று அந்த புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினான். அடுத்தடுத்த பக்கங்களைப் புரட்ட தொடர்ந்து 'பஞ்சபாண்டவர், எனது சுக துக்கங்கள், சிவனொளி பாதமலை" போன்ற பாடங்கள் தென்பட அவற்றை ஆவலுடன் வாசித்தான்.

ஒரு நாள் இன்ஸ்பெக்டர் வந்திருந்தருப்போ ' சிவனொளி பாதமலை ' பாடத்தை நன்றாக வாசித்ததற்காகத் தானே 'மிகக்கெட்டிக்காரப் பையன்' என்று என்ன பாராட்டினாரு, வாத்தியாரய்யாவு ..ம் என்னைய நல்ல பிள்ளைன்னு சொன்னாரு, நா....கணக்கு பாடத்திலயும், வாசிப்பிலயும் எல்லாப்பிள்ளைகளையும் .................. விட மாக்ஸ் வாங்கினேனுதானே பெரிய வாத்தியா ரைய்யா என்னை மேடைக்கு கூப்பிட்டு என் தோளை தட்டி எல்லாத்தையும் கைத்தட்ட சொன்னாரு.

கூட்டாளி மாறு ராசு, வேலுசாமி, சுந்தரம், சங்கர் எல்லாரையும் இனி எப்ப பார்க்க போறேன். பள்ளிக்கூடம் விட்டேனா தட்டான் பிடிக்கப் போறது, சின்ன ஆத்துல மீன் பிடிக்க போவது இனிமே எப்ப போகப் போறேன்.

இப்படி அவன் எண்ணிய எண்ணமெல்லாம் ஏக்கமாய் மாறி அவன் கண்களிலிருந்து கண்ணீராய் கொட்டியது.

இதை அவதானித்த அழகமுத்து திகைத்தான்........................ அவன் அருகில் வந்து "தமிழ் வாசிக்க தெரியுமா ஒனக்கு என்று கேட்டான். "

" ஆம் " என்ற அர்த்தத்தில் தலையை ஆட்டினான் சிறுவன்.

" எதுக்கு இப்ப அழுவுற " ? அவன் பேந்த பேந்த விழித்தான்.

" நீ தமிழ் பொடியனா"?

தலையை ஆட்டி 'ஆம்' சொன்னான்.

" அட இவ்வளவு நாளா எங்கிட்ட சொல்லலியே சிங்களம் கதைக்கவும் நீ சிங்கள பொடியன்னுல்ல இருந்தே... ன் . ஒங்க அப்பா அம்மா ல்லா.....ம் எங்கிருக்காங்க.

ஆர்வத்தோடும், பரிவோடும் அடுக்கடுக்காய் அழகமுத்து கேள்விகளை கேட்டான்.

"எங்கப்பா தலவாக்கொல்லைல வுள்ள நெல்லிமல தோடத்துல இருக்காரு. ஏங்கம்மா செத்து பொயிரிச்சி, எனக்கு ஒரு அக்கா இருந்திச்சி அதுவும் போனவருஷ...ம் வெறகு கொண்டு வரப்போனப்ப விழுந்து செத்து போயிரிச்சி.

" அடப்பாவமே! அவள்ளோ சீக்கிரமா ரெண்டு பேரும் போயிட்டாங்களா? ஆப்ப ஒங்கப்பாதா...ன் இருக்கிறாரே நீ எதுக்கு இங்க வந்த"?

சிறுவன் யோசித்தான். சோகம் அவனது முகத்தைக் கப்பிக் கொண்டது. பின் குழந்தைத் தன்த்தில் கூடிய அனுபவத்தைக் கூறினான்.

" நாங்க இருக்கிற லயத்துக்கு அடுத்த லயத்துல ஒரு மாமா இருக்காரு அவருக்கு கால் கொஞ்சம் கோணல். அவரு கல்யாணம் கட்டினாரு, அதுலருந்து எங்கப்பாவ அந்த பொம்பளையாள்கிட்டயே கதைக்கப் போவாரு. காசு இன்னும் சாமான் எல்லாம் கொண்டு பொயி குடுப்பாரு. ஆத ஏன்னு எங்கம்மா கேட்டா அடிப்பாரு. சில நாளாகி வீட்டுக்கு வரமாட்டாரு, ஒரு நாளு குடிச்சிபுட்டு வந்தாரு வீட்டுக்கு சாமான் ஒன்றும் வாங்கிட்டு வரலயான்னு எங்கம்மா கேட்டதுக்கு வயத்துல ஒதச்சாரு. ஆப்படியே எங்கம்மாவுக்கு வருத்தம் வந்து ஆஸ்பத்திரியிலருந்து - செத்துப் போயிலுச்சி.

நா........ அஞ்சாப்பு படிக்கிறப்ப எங்க தோட்டத்து தொரவுட்டு கூட்டாளி வீட்டுக்கு ஆள் கேட்டார்னு சொல்லி எங்கப்பா என்னய இங்க கொண்டாந்து வுட்டாரு. நா.........வரமாட்டேன்னு அழுதே....ன். தொரகிட்ட கெட்டபேர் எடுக்க ஏவாது, நீ போவாட்டி கொன்னு புடுவே.......ன்னு சொல்லி பேசி கொண்டாந்து வுட்டாரு".

என்று தன் துயரக் கதையைக் கூறி முடித்தான். அழகமுத்து அதிர்ச்சி மேலீட்டால் சிறிது நேரம் மௌனமாய் அப்படியே நின்றார்.

" என் ரெத்தமெல்லா.......ம் அப்டியே கொதிக்குது. ஒங்க அப்ப.......ன் ஒரு மனுஷனா? முட்டாள் பய, ஒரே புள்ளய படிக்க வச்சி செல்லம் பார்காம அடிம வேலைக்கு அனுப்பிருக்கான். சீ... மானங்கெட்டவன். கட்டிய மனைவிய பரிதவிக்க விட்டுட்டு கண்டவளோட போன அயோக்கிய....ன். அநியாயமா ரெண்டு உயிர்கள கொண்ணுடானே. "

என்று ஆக்ரோஷமாகப் பேசியவன் "சரி ஒங்கப்பா அந்த புது பொம்பளக்கிட்ட போறது அந்த கோணக்காலு பயலுக்குத் தெரியாதா?

" தெரியும். அந்த மாமா பாவம். ஏதுவுஞ் சொன்னா அந்த மனுசி அந்த மாமாகிட்ட சண்டைக்குப் போயிருவது. அதனால அந்த மாமாவுக்கு சரியான பயம். " தொடர்ந்து பதில் அளித்தான் பையன்.

அதைக் கேட்ட அழகமுத்து பல்லை கடித்தவாறு" எனக்கு அந்த அறிவுகெட்ட பயல்களைப்பத்தி என்னா சொல்றதுன்னே தெரியல. சரி. அந்த கதைய வீசு". என்று பேச்சை மாற்றினான்.

"நானு அட்டன் பக்கந்தா..ன் எங்க மாமாதா..ன் என்ன வளத்தாரு படிக்கப் போகச் சொல்லி கண்டிப்பாரு: அடிப்பாரு: ஆனா நாந்தா.. ன் கொழுத்துப் போயிட்டு படிக்க கள்ளம்டிச்சி ஆட்டம் போட்டேன்: அதுக்குத் தண்டனையா இப்ப இங்க வந்து அடுப்புல வேகுறேன். நீயுமுல்ல இங்க வந்துட்டே!"

என்று.கூறி நிறுத்தியவன் "சரி" நாளைக்கு வா. எனக்கு லீவு நாளுமிச்சத்த நாளைக்கு பேசிக்கு வோ..ம் என்று கூறி பையனை அனுப்பி வைத்தான்

பையனின் ஊர் பெயர் யாவற்றையும் அறிந்த அழகமுத்துக்கு அவன் மீது. தன் இனத்தான் என்ற பிரிவும். அனுதாபமும் ஏற்பட்டது. தன் உடன் பிறப்பாக அவனை ஏற்றான்.

மறுநாள் சிறுவன் வந்தான். மீண்டும் அவனைக் கேள்ளி கேட்டு குழப்ப விரும்பாது "ஒனக்கு வேனுங்கிறத கேளு: வங்கித் தாரே..ன்" என்றான் கனிவாக.

"ஒன்று வேணாண்ணே".

"அப்ப ஏ..ன் அழுத?"

எம் படிப்ப கெடுத்து இங்கு கொண்டாந்து வுடவும் கவலையாயிருக்கு".

"அப்ப ஒனக்கு படிக்க ஆசையா?"

"ம;" தலையை ஆட்டினான்.

இதைகேட்டு ஒரு தீர்மானத்திற்கு வந்தானாக "சரி பயப்படாத." நா சொல்றமாதிரி செய்யனு..ம்." என்றான் அழகமுத்து.

"சரி என்றான்".

நீ வேல செய்யிற அந்த வீட்டுக்கு காரங்களுக்கு என்னை நல்லாத் தெரியும்..ம் அதுனா:ல நா..வரமாட்டே..ன். எங் கூட்டாளி ஒருத்தென கிரான்பாஸ்ல இருக்கான்: நீயிருக்கிற பங்களவுக்கு அவன கூட்டிக்கிட்டு வர்றே..ன் அவன் உன் 'மாமா'ன்னு சொல்லிப்புட்டு.· அவெ..ன் ஒண்ண கூப்பிடுறப்ப மாமாவோட போறேன்னு அழு ஓன்ன வெளிய கொண்டாந்து எங்காவது பள்ளயில சேர்த்துபுடுறே..ன்: சரியா".

ஒரு தகப்பனை போல் அழகமுத்து கூறிய வார்த்தைகலைளக் கேட்டு சந்தோஷ மேலீட்டால் அதற்கு ஆமோதித்தான் பையன்.

நாடகம் பலித்தது. கட்டைப் பிரமசாரியான அழகமுத்து பையனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிலுள்ள ஒரு ஆரம்பப் பாடசாலையில் சேர்த்தான். சேர்வுக்காசு ஆயிரம் ரூபாய்' கட்ட வெண்டுமென்று பாடசாலை நிர்வாகம் பணித்தபோது தன் முதலாளியிடம் கடனாக வாங்கி அந்தக் காசைக் கட்டியவன் தனது சம்பளத்தில் சிறிது சிறிதாகக் கழித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டான். தொடர்ந்து சொந்த சகோதரனைப்போல எண்ணி அவனது கல்விக்கு உறுதுணைப் புரிந்தான்.

சிறுவன் கல்வியில் சூரியனாகப் பிரகாசித்தான்: ஐந்தாம் வகுப்பிலும். எட்டாம் வகுப்பிலும் நடத்தப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையில் முதல்மாணவனாக சித்தியெய்தினான். அவனைப் பாடசாலை பாராட்டியது .றோயல் கல்லூரிக்குத் தெரிவானான். அங்கும் வகுப்பில் மிகக் கெட்டிகார மாணவனாகத் திகழ்ந்து உயரிதரப் பரீச்சையில் மிகவும் சிறப்பாக சித்தியெய்தி பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானான். அங்கு முதற் கலையில் தேர்ந்து பின் முதுமானிப் பட்டம் பெற்றான்.

சூழ்நிலைக்காரணமாக அடிக்கடி அழகமுத்துவைக் கான்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போனதுடன் ஒரு நாள் அழகமுத்துவைச் தேடிசென்றவனுக்கு அவன் அங்கே இல்லாமல் எங்கோ அனுப்பபட்டதாக கேள்விப்பட்டு மனவருத்தத்துடன் திரும்பினான். இன்று ஒரு கல்வி பணிப்பாளராக மனைவியும், மக்களுமாக சமூதாயம் போற்றும் ஒரு உயர்ந்த மனிதனாக நிறைந்த வசதியுடன் வாழ்ந்து வரும் சேற்றில் மலர்ந்த செந்தாமரை பரசுராமன் ஒரு பாடசாலை விளையாட்டுப்போட்டியிலே பிரதம அதிதியாக கலந்துக்கொண்டு உரையாற்றிய வேளையில் வெற்றிலை கூறு விற்கச்சென்ற அழகமுத்து அடையாளங்கண்டு பின்னர் அவரை தேடி வந்து சேர்ந்த விபரம் புரிந்தது.

"என்னங்க! சித்தபிரமை பிடிச்சமாதிரி அப்படியே உக்காந்திட்டிங்க மரகதத்தின் கேள்வி அவரது மௌனத்தை களைத்தது.

"மரகதம்! அவர் தான் எனது தந்தை, தாய், என் பாதுகாவலர், இல்லை என்னை ஆளாக்கிய தெய்வம் இனிமேல் இவர் தான் இந்த வீட்டுக்கும் பாதுகாவலர் ஆவார்." உணர்ச்சிவசப்பட்டு பேசியதைக் கேட்ட மரகதம் திகைத்து நின்றார்.

இதுவரைக்கும் எனது இதயத்தை அழுத்திக்கொண்டிருந்த கவலை இன்றோடு மறைந்தது. சரி எல்லா விபரங்களையும் அப்புறமா செல்றேன். முதல்ல இவருக்கு குளிக்க தண்ணீர் வார்த்து சாப்பாட்ட கொடு நா இவருக்கு உடுப்பு கொண்டு வர்றேன்.

சொல்லிவிட்டு அலுமாரியில் சலவை செய்யப்பட்டு மடித்து வைக்கப்பட்டிருந்த அவரது சட்டை ஒன்றையும், வேட்டி ஒன்றைம் எடுத்துக் கொண்டு அப்புதியவருக்க கொடுப்பதற்காக குளியலறையை நோக்கி நடந்தார் பரசுராமன்.

◆ ◆ ◆



அக்னஸ் சவரிமுத்து

கலை இலக்கியத்துறையில் ஈடுபாடுள்ள வட்டகொட வடக்கு மடக்கும்புற தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றி வரும் இவர். பயிற்றப்பட்ட ஆசிரியரும், ஆங்கிலத்தில் உயர் டிப்ளோமா பட்டம் பெற்றவருமாவார்.

எழுத்துத் துறையில் ஈடுபாடுள்ள இவர் எண்பதுகளில் இருந்து பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதி வருகிறார். பாடசாலை நாட்களில் நாடகங்களில் நடித்து பாராட்டும் பரிசும் பெற்றுள்ளார். மலையக பாரம்பரிய கலைகளிலும் ஈடுபாடுக்கொண்டு அதனை மேம்படுத்துவதில் ஆர்வமுள்ளவர். இவரது ஆக்கங்கள் தேசிய பத்திரிகைகளிலும் இடம் பெற்று வருகின்றன. இவர் நல்ல படைப் புகளை எதிர்காலத்தில் தருவார் என்ற நம்பிக்கை தென்படுகின்றது.

# நலிவுற்ற மக்கள்

சிகரங்கள் மேல் வாழ்ந்த போதும்
சிறுமடுவாய் போய்விட்ட வாழ்வில்
தகரங்கள் துருபிடித்தல் போலே
தகர்கின்ற தொழிலாளர் நாசி
முகர்கின்ற பூக்களுமே முள்ளாய்
முகமெங்குங் குத்துவத னாலே
நகரத்தான் மறுக்கின்ற ஏழ்மை
நகர்கின்ற நாளெந்த நாளோ?

o o o

தேசத்தின் இதயத்தை போன்ற
தேயிலை தோட்டத்து மக்கள்
பேசத்தான் வாய்கொண்டு வாழ்ந்தும்
பேசாத விலங்குகளாய் அங்கே
தீசுட்ட புழுவாகிச் செத்து
தினந்தோறும் மாய்கின்ற மாய்ச்சல்
காசுக்குள் புரள்கின்ற வர்கள்
கண்களக்குள் விழுவதே இல்லை.

o o o

விரல்களினைக்கொண்டிருக்கும் கைகள்
வீணையென தேயிலையை மீட்ட
தரத்துடனே வைத்திருந்து நித்தம்
தளிர்கொய்யும் மலைநாட்டுபெண்ணின்
சிரமதிலே தொங்குகின்ற கூடை
சிறப்புடனே செய்கின்ற சேவை
மறப்பவர்கள் இருக்கின்ற தாலே
மலையகத்தார் நலிவுற்றார் அன்றோ!

பூண்டுலோயா
மெய்யன் நட்ராஜ்

மலையகத்தில்

## பத்திரிகைத் துறை
## பயிற்சிப் பட்டறை

மலையக இளைஞர்களிடைய பத்திரிகைத் துறை சம்பந்தமான பயிற்சிப் பாடநெறி ஒன்றை நாடாத்துவதற்கு மாற்று அபிவிருத்திக்கும், தொடர்பூடக செயற்பாட்டிற்குமான நிலையத்தின ஏற்பாட்டில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. முதலில் இந்த பயிற்சி நெறி மத்திய மாகாணத்திலும், பிறகு ஏனைய மாகாணங்களிலும் நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பயிற்சி நெறியில் பங்குப் பற்ற விரும்புகின்றவர்கள் பெயர், முகவரி, கல்வித்தகமை, பத்திரிகைத் துறையில் தங்களுடைய ஈடுப்பாடு ஆகியவிபரங்களுடன் ஏப்ரல் 25ம் திகதிக்கு முன்னர் ஏட்பாட்டாளர் பத்திரிகை துறை பயிற்சி நெறி த.பெ.எண். 32 கண்டி. என்ற முகவரிக்கு விணணப்பிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயும் ஒரு பெண்ணாய்!

நல்லையா சந்திர[illegible]
இறத்தோட்டை

நம் கடவுள்களில் கூட
எத்தனைப் பெண்
தெய்வங்கள்.......
அதிலும்
அர்த்த புஷ்டியாக
ஆக்கி வைத்துள்ளவை
எத்தனை? எத்தனை?
ஆணுக்கு சரிநிகராய்
அர்த்த நாரீஸ்வரர்
பெண் தெய்வங்களுக்கென
பேர் போன விழாக்கள்
அது கூட
அறிந்திராத
உன் வாழ்வில்........
நீயும் ஒரு பெண்ணாய்
உன்னைப்பற்றி - நீ
ஒரு நாளும்
ஒரு கணமாவது
சிந்தித்ததில்லை
இல்லை! உன்
சிந்தனைக்கு சீரழிந்த
வாழ்க்கை முறை
வேலியாய் மறைக்கின்றதா?
ஒரு கணம் சிந்தித்துப்பார்
பாரில் எத்தனைப் பெண்கள்
பதித்து விட்டு சென்றார்கள்
தம் புகழை
ஆனால் ..........நீயோ
இதுவரையும்
படங்கு கடியப்பாளத்தில்
பசியாறப் பட்டிணியுடன்
பறக்க முடியாத பறவையாய்
நூல் அறுந்த பட்டமாய்
நாளும் நீ சுமக்கும்
தேனான தேயிலைத்
தளிரின் பாரமதை - உன்
கொழுத்த கொழுந்து கூடைக் கண்டு
குறிப்பு வைத்துச் சொல்லும்
அந்த ..........அவர்களின்
கனிவான கணிப்புக்கு - ஏன்
கண்ணில்லை இன்னும்
இன்னும் உன்னிலுள்ள - அந்த
எத்தனை? எத்தனை?

சுமைகளுக்கு
கம்பியூட்டர்களுக்கு கூட
கணிக்க முடிவதில்லை
ஆம்!
அந்த ........சுமைகளை சுட்டும்
தராசுகள் இன்னும் - ஏன்?
தரணிக்கு வரவில்லை?
நீ........சிந்தித்து
சீறியெழுந்தால்..........
உயர்ந்திருக்கும்
முத்தான முகடுகளில்
தென்றல் என்ன?
தேயிலை தளிர்களென்ன?
எல்லாமே - உன்
சோக சுமைகளுக்குள் தான்
உன் போன்ற - சிந்தித்த
எத்தனைப் பெண்மைகள்
சீரான மலையில் - இன்று
சிறப்பாக வாழ்கின்றன
அது மட்டுமா?
உன்போன்ற..........
சோக சுமைகளுக்கு
சுதந்திரம் சுகம் தர
சுதந்திர தாகமூட்டுகின்றன
ஒரு கணம் - அந்த
குழலின் ஓசையையாது
உன் வாழ்வில்..........
ஒரு தடவை
கேட்டு விட்டுப்போ
நீயும் ஒரு பெண்ணாய்
எனென்றால்............
நானும் உன் போன்ற
சுமைதானா
சுகம் காணா
சுமைதாங்கிக்கு
சொந்தக்காரன்
இறுதியாய் ஒன்று - நீ
தொடர்ந்தும் - அந்த
லயத்துச் சிறையானால்.........
உன் வளமான வாரிசும் -
அதில்

ஆயுள் கைதியாகவே
சிறைப்படுத்தப்படும்
அப்போது ........ஒரு
சுதந்திரத் தினத்தன்று
உன்வாரிசின் தண்டனை
குறைக்கப்படும் என்று மட்டும்
ஒரு போதும் ............
எண்ணாதே!
அதனால்.......சிந்தி சிந்தி சிந்தி
நீயும் ஒரு புதுமைப் பெண்ணாய்

## பாலியல் வல்லுறவுக்கு மரண தண்டனை

பெண்களுக்கான் சட்டங்கள் செயற்படுத்தப்படுவதாக தெரியவில்லை. ரீடா ஜோன் என்ற இந்திய பெண்ணுக்கு என்ன நடந்தது? கணவனுடன் செல்லும் போது பாலியல் வல்லுறவு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார். பாலியல் வல்லுறவு குற்றத்திற்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஆளும் கட்சி உறுப்பினர் சிறிமணி அத்துலத் முதலி மகளிர் விவகார அமைச்சின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றி போது தெரிவித்தார்.

**குன்றின் குரலுக்கு**
**உங்கள் ஆக்கங்கங்களை**
**அனுப்பி வைக்கவேண்டிய முகவரி**

❖
❖ ❖

**ஆசிரியர்**
**குன்றின் குரல்**
**30, புஸ்பதான மாவத்த,**
**கண்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்ட பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகம் 17.01.1998 முதல் 15.12.1998 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கான செயலாளரின் அறிக்கை

### அறிமுகம்

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் தோட்ட பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகம் பெருந்தோட்டத் துறைப்பகுதிகளில் செயற்படும் தனது சகோர அமைப்புகளின் ஒருங்கிணைப்புச் செய்வதற்கே ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக தனது அங்கத்துவ அமைப்புகள் மனித அபிவிருத்தி நடவடிக்கைகளில் தனது கவனத்தை செலுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து அவற்றின் மீது தனது செல்வாக்கினைப் பிரயோகிக்கத் தொடங்கியது. இது பெருமளவுக்கு சித்தியானதொன்றாக அமைந்த அண்மை காலத்தில் நாட்டின் சமூக, பொருளாதார பாதுகாப்பு நிலைமைகள் வடகிழக்கில் தொடரும் யுத்தம் காரணமாக குழப்பமான நிலைக்கு தள்ளப்பட்டது. இதன் காரணமாக தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகம் தனது நடவடிக்கைகளை தொடரு வதற்கு உவப்பான சூழ்நிலை இல்லாமல் போய்விட்டது. ஆயினும் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை யை மேலோங்கச் செய்வதிலும் இன ஒற்றுமைக்கான ஓர் உந்து சக்தியாக இருப்பதிலும் நாம் அதைரியப்பட வில்லை. சமாதான நடவடிக்கைகளில் ஈடுப்படுவதற்கு பிரகாசமாக ஒரு சூழ் நிலையை நாம் எதிர்நோக் குகின்றோம்.

இந்திய வம்சாவளி தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் சர்வஜன வாக்குரிமை பறிக்கப்பட்டதன் 50 ஆண்டு நிறைவை மிகுந்த கவலை யுடன் நினைவுக் கூறுகின்றோம். உரிமை நடவடிக்கையாளர்களுடன் இணைந்து தோட்ட மக்களின் உரிமைகளுக்காக நாமும் குரல் கொடுக்கின்றோம். மனித உரிமை சாசனம் பிரகடனப்படுத்தப்பட்ட 50 ஆண்டு நிறைவை கொண்டாடும் இவ்வேளையில் தோட்ட மக்களும் அச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிக்கும் நிலையை அடைவார்கள் என நாம் நம்புகிறோம்.

### செயலகத்தின் அங்கத்துவ அமைப்புகள்

கீழ்காணும் அமைப்புகள் மேல்குறிப்பிட்ட காலப்பகுதியில் அங்கத்துவம் வகித்தன. சமூக கலாச்சார மேம்பாட்டுக்கான அமைப்பு, கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம் - மலையக கலை இலக்கிய பேரவை, மனித அபிவிருத்தி அமைப்பு, கொட்டகலை சமூக சேவை மன்றம், பெண்கள் விமோசன ஞானோதய மன்றம், தோட்ட கிராமிய கல்வி அபிவிருத்தி அமைப்பு, சத்தியோதய, சமூக ஆய்வுக்கும் சந்திப்புக்குமான நிலையம், சமூக நல்வழி மன்றம், ஸ்ரீலங்கா ஐக்கிய விவசாய சங்கம், நவயுக சமூக அபிவிருத்தி மன்றம், ஐக்கிய சேமநல நிறுவனம், ஊவா தொழிலாளர் உதவி நிலையம், தொழிலாளர் அபிவிருத்தி நிலையம், கெமி சேவா செவன,

### வருடாந்த பொதுக் கூட்டம்

1998ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் திகதி ஹட்டன் கிறஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவத்தில் வருடாந்த பொது கூட்டம் நடைபெற்றது. அன்று நடப்பு உத்தியோகத்தர்கள் தெரிவு முக்கிய பணியாக இருந்தது. திரு.ஆர்.மைக்கல் ராஜ் தற்காலிக தலைவராக கடமையாற்றினார். பின்வருவோர் நடப்பு உத்தியோகத்தர்களாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர். இணைப்பாளர் திரு.பி.மோகன் சுப்ரமணியம், செயலாளராக திரு.ஜே.பிரான்சிஸ், பொருளாளர் திரு.எம்.களியப்பெருமாள், பிரதி இணைப்பாளர் திரு.பி.லியனாராய்ச்சி, உதவிச்செயலாளர் செல்வி. ஏ.மார்கிரட் மேரி.

இவர்கள் அடுத்த வருடாந்த பொதுக் கூட்டம் வரை இப்பதவியில் இருப்பர். செயலாளர் திரு.ஜே.பிரான்சிஸ் கடந்த வருட பொது கூட்டத்தின் செயலாளரின் அறிக்கையை சமர்ப்பித்தார். பொருளாளர் திரு.எம்.களியப் பெருமாள் 1997ம் ஆண்டிற்கான நிதி அறிக்கையை சமர்ப்பித்தார். செயலாளரின் அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. கணக்கறிக்கையில் சில விபரங்களுக்கான விளக்கங்கள் சபையினரால் கேட்கப்பட்டன.

திரு.ஜோசப் ஜேஸ்கொடி, பனிமனை செயலாளராக செல்வி. கோகிலவர்த்தனி உதவி பனிமனை செயலாளராகவும் திறம்பட செல்பட்டனர்.

### செயற்குழு கூட்டங்கள்

இக்காலப்பகுதியில் ஐந்து செயற்குழு கூட்டங்கள் நடைப் பெற்றுள்ளன.

1998ம் ஆண்டு 23 மார்ச், 14 ஜுலை, 21 செப்டம்பர், 10 நவம்பர், 1 டிசம்பர், ஆகிய மாதங்களில் நடைபெற்றன.

மேற்படி கூட்டங்களில் பெருந்தோட்டத்துறையில் இன்று நிலவும் பிரச்சினைகள் பாதுகாப்பு நிலைமை, தோட்ட இளைஞர்கள் பற்றிய விபரங்கள் ஆகியன ஆராயப்பட்டன.

### வேவல்வத்தை தோட்டம் சம்பவம் தொடர்பாக

9.9.98 அன்று இரத்தினபுரி வேவல்வத்தை தோட்டத்தில் இடம் பெற்ற துரதிஷ்டமான சம்பவத்தை முன்னிட்டு தோ.பி.கூ.செயலகம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இச்சம்பவத்தில் தமிழ் தொழிலாளர்களுடைய உடைமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கப்பட்டதுடன் பாதுகாப்பற்ற ஒரு நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர். தோ.பி.கூ.செ.யின் முக்கிய உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவொன்று வேவல்வத்தை பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொண்டு பாதிப்புற்ற மக்களுக்கு ஆறுதலையும், தேறுதலையும் கூறியது. அத்தோடு சம்பந்தப்பட்ட தகவல் அனைத்தையும் பிற ஸ்தாபனங்களுக்கும், முகவர் நிலையங்களுக்கும் அறிவித்து நிவாரணப்பணிகள் இடம்பெற வழிசெய்தது.

## நொவிபின் தேவை மதிப்பீடு

கடந்த 5.11.98 அன்று தோ.பி.கூ.செ. தனது அங்கத்துவ அமைப்புகளுடன் "நொவிப்" நிதி நிறுவனத்துடன் ஒரு ஆலோசனை கூட்டத்தை நடாத்தியது. அமைப்புக்கள் கொண்டுள்ள சக்தி, பலவீனம், சந்தர்ப்பங்கள், அச்சுறுத்தல்கள் ஆகியன தொடர்பாக பொது நோக்குடன் கலந்துரையாடப்பட்டது. இது அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு அங்கத்துவ அமைப்புக்கள் கொண்டுள்ள சக்தியை நோக்குவதற்கு உதவியது.

## மீளாய்வு பட்டறையும், பின்னூட்டலும்.

தோ.பி.கூ.செ. யின் இலட்சியம், குறிக்கோள்கள், செயற்பாடுகள் தொடர்பாக இரண்டு புதிய மீளாய்வு பட்டறைகள் 22 அக்டோபர் 98 சத்தியோதயத்திலும், 19 நவம்பர் 98 பெண்கள் அபிவிருத்தி நிலையத்திலும் நடைப்பெற்றன. இம்மீளாய்வு பட்டறைகளில் செல்வி. கௌரி பழனியப்பன் சமூகவியலாளர், திரு. லலித் அபேசிங்க தலைவர் சத்தியோதயம், வண.பிதா.ஜெப்ரி அபேசேகர ஆகியோர் வசதிப்படுத்துவர்களாக கடமையாற்றினார்கள். மீளாய்வுகளின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் பின்வருமாறு.

01. இலட்சியம் (Vision)
02. குறிக்கோள்கள் (Objectives)
03. செயற்பாடு, பாத்திர பங்கு (Activites)

## 01. இலட்சியம்

1. பெருந்தோட்டத்துறை பிரதேசங்களில் தோ.பி.கூ.செ பெருந்தோட்டத்துறை பிரதேசங்களில் தொழிலாளர், விவசாயிகள் மத்தியில் அதனது சமூக நடவடிக்கைகள் தோட்டபிரதேசங்களிலுள்ள தோழமை தொண்டர் குழுக்களின் வளங்களை பகிர்தல் என்பவற்றின் மூலமாக நீதியுடன் கூடிய சமாதானத்தை ஏற்படுத்துவதோடு இலங்கையின் சமூக - பொருளாதார அரசியல் அடிப்படைகளை மாற்றுவதாகும்.

## 02. குறிக்கோள்கள் (Objectives)

அ. சமத்துவத்தின் அடிப்படையில் எல்லா அங்கத்துவ குழுக்களின் மத்தியில் ஒருங்கிணைப்பும், கூட்டுறவும் நிலவுவதை உறுதிச் செய்தல்.

ஆ. பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களையும், விவசாயிகளையும் பாதிக்கின்ற நடப்பியல் பிரச்சினைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல், ஆய்வு மேற்கொள்ளுதல் பொது நடவடிக்கைகளில் ஈடுப்படுதல் ஆகியன.

இ. தகவல் சேகரிப்பும், பரிவர்த்தனையும், ஆவணப்படுத்தலும்.

ஈ. செவிப்புல, கட்புல சாதனங்கள் தயாரிப்பதோடு அவற்றைப் பெற்றடைவதுடன் அங்கத்துவ குழுக்களுக்கு அவற்றை விநியோகித்தல்

உ. மனித உரிமை மீறல்களுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்களில் அங்கத்துவ குழுக்களை அணிதிரட்டி ஓர் அழுத்தக் குழுவாக இயங்கச் செய்தல்

ஊ. தோட்டப்பிரதேசங்களிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக தோ.பி.கூ.செ. யின் வலைப்பின்னலை பலப்படுத்துவதோடு தேசிய, சர்வதேசிய மட்டத்திலுள்ள

எ. ஏனைய வலைப்பின்னல்களோடு சேர்ந்து இயங்குதல்.

ஏ. சமூகத்தில அடிப்படையில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் பெருந்தோட்ட பிரதேசங்களில் பெண்களுக்கும், ஆண்களுக்கும் மத்தியில் புதிதாக உருவாகும் தலைமைத்துவத்தை உருவாக்குதலும், வலுப்படுத்தலும்.

ஐ. தன்னிலே தங்கி வாழும் நிலையில் அங்கத்துவ குழுக்கள் இயலுமான சந்தர்ப்பங்களில் வளங்களை பகிர்ந்து கொள்ளுதலும், ஒருவருக்கொருவர் • தார்மீக ஒத்துழைப்பை வழங்குதலும்.

## 03. செயற்பாடு - பாத்திர பங்கு (Roles)

**அ. பயிற்சி (Training)**

மனிதவள அபிவிருத்தி, முரண்பாடு முகாமைத்துவம், ஆண்-பெண் பால்நிலை, உலகமயப்படுத்தலில் பேணுதலுக்குரிய அபிவிருத்தி, சுற்றாடல், மனித - சட்ட உரிமைகள், கல்வி, கருத்திட்ட உருவாக்கம், அமுலாக்கம் மீளாய்வு மற்றும் நிதி முகாமைத்துவம்.

**ஆ. தொடர்பூடகப் பயிற்சி (Training in Media)**

வெகுசனத் தெடர்பு ஆக்க ரீதியான அரங்ககலை, எழுத்தாளர் வேலைக்களம்.

**இ. சுயத்தொழிலுக்கான பயிற்சி**

பயிற்சியை முன்னெடுத்தல்

ஈ. தொழில் சார் - தொழில் நுட்ப - நூலகவியல், செயலகவியல்

## 04. நியமனம் பெற தலையீடு செய்தல் (Intervention)

அ. யுத்த சூழ்நிலையும் பாதுகாப்பு நிலவரங்களில் மனித உரிமைகள் பிரச்சினைகள்.

ஆ. இனங்களுக்கிடையிலான நீதியும் சமாதானமும்.

இ. குடும்ப வன்முறை, சிறுவர்களுக்கெதிரான வன்முறை, சமூகவிரோத நடவடிக்கைகள், போதைவஸ்து பாவித்தலும், வியாபாரமும்.

ஈ. மதுபானம்

உ. பெருந்தோட்டத் தறையில் கட்டாய குடும்ப கட்டுப்பாடு கல்விசார் பிரச்சினைகள் காணிப்பகிர்வும்,

(14ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இரத்தினபுரி வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் புதைந்துள்ள காரணிகள் என்ன?”

1998 ஆம் ஆண்டு செப்டம்பர் 8ம் திகதி தமிழ் தொழிலாளர்களின் குடியிருப்புகளான லயம் அறைக்குப் பக்கத்தில் இரண்டு சிங்களவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டுக்கிடந்த சம்பவத்தினை தொடர்ந்து கொழுந்து விட்டெரிந்த இனவாத வன்முறைத் தீ இறுதியிலே 800க்கு மேற்பட்ட லயம் அறைகளை சாம்பலாக்கிய சம்பவத் தோடு சற்றே ஓந்திருக்கின்றது.

குறிப்பிட்ட இரு சிங்களவர்களும் கொல்லப்பட வதற்கான காரணங்கள் இவைதான் என்று பொலிஸாரும் பொதுத் தகவல் ஊடகங்களும் தெரிவித்த கருத்துகள் உண்மைக்கு மாறானதும், பரஸ்பர நம்பகத் தன்மை அற்றதாகவும் உள்ளன என்பதை குறிப்பிட வேண்டியிருக்கின்றது. பெண்கள் கற்பழிப்பு விவகாரம் தான் புகைச்சலை உண்டாக்கி விட்டதாக சிலர் கூற, (கசிப்பு) கள்ளச்சாராய பிரச்சினையே கலவரத்துக்கு காரணம் என்று மற்றொரு சாரார் கூறியிருந்தனர்.

இந்த வன்முறை சம்பவத்திற்கு மூல காரணமாக இந்த இரண்டு சம்பவங்களில் எதை வேண்டு மானாலும் எடுத்துக் கொள்ளலாம் என கூறினாலும் இந்த சம்பவத்திலேயே புதைந்துள்ள உண்மைகள் இவற்றிற்கெல்லாம் நேர்மாறானவையாகவே உள்ளன என்பதையும் கூறவேண்டி உள்ளது. ஆகவே இந்த சம்பவம் பற்றிய உண்மைகள் ஆராயப்படாமல் வெளியிடப்படுகின்ற கருத்துக்கள் அனைத்துமே ஒவ்வொன்றினதும் மேலோட்டமான கருத்துக்களேயாகும். இரத்தினபுரி தொடக்கம் பலாங்கொடை வரை நீண்ட பெரும் பாதையோடு இணைந்ததாக அமைந்துள்ள தமிழ் தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்புகளாக அமைந்துள்ள மேற்குறித்த லயம் அறைகள் அமைத்தும் தேயிலைத் தோட்டங்களை அடிப்படையாக வைத்தே உருவாக்கப்பட்டவையாகும்.

வெள்ளையரான ஏகாதிப்த்திய வாதிகள் மூலமாக தோட்டங்களில் வேலைவாங்குவதற்காக தென் இந்நியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட இந்த தமிழ் தொழிலாளர்கள் எந்த வித அடிப்படை வசதிகளும் வழங்கப்படாதவர்களாக, உரிமை மறுக்கப்பட்ட ஊமை ஜீவன்களாக பல சகாப்த்தங்கள் தனது உழைப்பினை மாத்திரமல்ல தங்களது உயிர்களை கூட இந்த மண்ணை செழிப்படைய செய்வதற்காக அர்ப்பணம் செய்கின்றார்கள். அது மற்றவர்களின் உயர்வுக்காகவும், அடுத்தவர்களின் வசதிக்காகவுமே ஆகும். அதுமட்டுமல்ல உழைப்பிற்காக அனேகமான அவர்கள் பெற்றுக் கொண்டது ஊதியத்தினை விடவும் அதிகமாக வசதிப்படைத்த வலியவர்களின் வசை மொழி யேயாகும்.

எமக்கு நினைவு தெரிந்த காலம் தொட்டு இந்த தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையினை உற்று நோக்கிய திலிருந்து அவர்களது வாழ்க்கை அன்று முதல் இன்று வரையிலே ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குட்பட்ட கதையாகவே தொடர்ந்து இருந்து வருவதை நாமறிவோம். அவர்களின் அனைத்து காரியங்களிலும் நிறைவேற்றுத் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அந்தந்த தோட்டத் துறை அதிகாரிகளின் கைகளிலேயே தங்கி இருக்கின்றது.

அதுமட்டுமன்றி குறிப்பிட்ட தேயிலை தோட்டங்களுக்குள் இருந்து வெளியுலகுக்கு வந்து விட்டால் பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு அடிப்பணிந்தே அவர்கள் வாழவேண்டியுள்ளது. சிங்களவர்களின் அனுமதியின்றி கிராமங்களுக்குள் நுழைந்து தொழில் பார்க்கவோ விறகுத் துண்டுகளை சேகரிக்கவோ அவர்களுக்கு சுதந்திர உரிமை கிடையாது. பொது பஸ்வண்டிகளில் கூட மற்றைய மக்களைப் போல தைரியமாக, உரிமையோடு தமது பிரயாணத்தை மேற்கொள்ளும் வாய்ப்புக் கூட அந்த தோட்ட தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டே வந்துள்ளது.

தமக்கு என்ன அநீதி செய்யப்பட்டாலும் அதை அவர்கள் பொறுமை யோடு தாங்கிக் கொள்ள வேண்டுமேயொழிய ஏதும் பேசிவிடக் கூடாது. தவறியேனும் இந்த நிகழ்ந்த அநீதிக்காக குரல் கொடுத்து ஏதாவது பேசிவிட்டால் போதும், அப்புறம் அடிவாங்குவது நிச்சயமாகிவிடும். இப்படியான தாக்குதல் சம்பவங்கள் வாரத்தில் ஓரிரு தடவைகளேனும் இடம்பெற்றே வந்துள்ளன. அதுமட்டுமின்றி சில தோட்டப் பொண்களை கற்பழிப்பது, தோட்ட மக்களின் பொருள்களை சூறையாடுவது, தோட்டப் பெண்கள் மானபங்கப்படுத்துவது. போன்ற நிகழ்வுகள் சர்வசாதாரணமாகவே இடம்பெற்று வருகின்றன. இப்படியான அநீதிகளுக்காக இந்த அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள் நியாயம் தேடி பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்வது கூட அரிதாக இருந்து வருகின்றது. பொலிஸாரின் ஒருதலை பட்சமான நடவடிக்கைகள் மூலமாக தமக்கு நீதி கிடைக்காது என்ற உண்மையினை இந்த மக்கள் அறிந்து வைத்திருப்பது அதற்கு ஒரு காரணமாகும்.

இப்படியான எல்லாவித அடக்கு முறைகளையும் வெறியாட்டங் களையும் பொறுமை யோடு சகித்து வந்த தோட்டத் தொழிலாளர்கள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறைகள் அமைதியோடு இந்த மண்ணுக்குள் சங்கமமாகி விட்டார்கள். ஆனால் உருவாகிக் கொண்டிருக்கும் இந்த தோட்டத் தொழிலாளரின் புதிய தலைமுறை இனிமேலும் இந்த அடக்கு முறைகளையோ, தமது பரம்பரை தலைவிதியையோ ஜீரணித்து ஏற்றுக்கொள்ளவோ, சகித்துக் கொள்ளவோ தயாராக இல்லை என்பதையே அவர்களது மேற்குறித்த எதிர் நடவடிக்கை பறைச்சாற்றிக் கொண்டிருக்கின்றது.

வேவெல்வத்த அளுப்பொலை தோட்டத்தில் இரு சிங்களவர் கொல்லப்பட்டதை வெறும் கள்ளச் சாராய விவகாரத்ததால் உருவான தென தீர்மானித்து விட முடியாது. நீண்ட காலமாக அழுகி சீழ்கட்டி ரணமாகி இருந்த காயத்திலிருந்து இப்பொழுது தான் வெடித்து சலம் வெளியேறி இருக்கின்றது என்று தான் கூறவேண்டியுள்ளது. கொல்லப்பட்ட வர்களில் பந்துசேன என்பவரைப்பற்றி தமிழவர்கள் மத்தியில் மாத்திரமல்ல சிங்களவர்களுக்குமிடையில் அதிருப்தியான நிலையே இருந்து வருகின்றது. கள்ளச்சாராய விவகாரத் தோடு பல கற்பழிப்பு விவகாரங்க ளிலும் அவர் சம்பந்தப்பட்டவர் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்ற கொலைச் சம்பவம் பற்றி நீதியான விசாரணை நடைப்பெற வேண்டுமென்பதே அனைவரினதும் கருத்தாகும். ஆனால் விசாரனை இடம் பெறுவதில் வேண்டுமென்றே தாமதம் ஏற்பட்டிருக்கின்றது. மட்டுமன்றி குறிப்பிட்ட பிரதேசத்தின் செல்வாக்கு மிக்க அரசியல்வாதி ஒருவர் இந்த விவகாரத்திலே தனது செல்வாக்கி னைப் பாவித்து அழகாக காரியமாற்றி இருக்கிறார் என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது கொலைச் சம்பவம் நடைப்பெற்ற மறுதினம் லொறிகளில் வந்திறங்கிய 200க்கு மேற்பட்ட சிங்கள் இனவாத குண்டர்கள் 50 பேர் கொண்ட கோஷ்டிகளாக பிரிந்து லயம் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைந்து அங்கிருந்த தமிழ் மக்கள் அனைவரையும் மூர்க்கத்தனமாக தாக்கி விரட்டி அடித்துவிட்டு எல்லாலய அறைகளுக்கும் தொழிலாளர் குடியிருப்புகளுக்கும் தீவைத்துக் கொளுத்தியிருக்கின்றனர்.

அளுப்பொல தோட்டத்தி லிருந்து அக்ரஸ்லானட், வெல்லாவெல, ராஸ்ஸகல வரையில் உள்ள லயங்கள் அனைத்துமே தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழ் மக்கள் தங்களது உயிர்களை பாதுக்காத்துக் கொள்வதற்காக அருகில் உள்ள காடுகளுக்குள் புகுந்நியிருக்கிறார்கள். தெருவிலே வாகனங்கள் நிறுத்தி தமிழர்கள் கீழே இறக்கப்பட்டு தாக்கப்பட்டதன் காரணமாக வீதியில் நடந்து தப்பியோடவும் முடியாத நிலை. கிராமங்களுக்கு குறுக்கு வழிகளில் வெளியேறவும் முடியவில்லை. எந்தவித வாகன வசதிகளும் அவர்களுக்கு கிடையாது. ஆகவே தான் உயிர்தப்புவதற்காக வனாந்தரத்திற்குள் நுழைந்திருக்கி றார்கள் அந்த அப்பாவி மக்கள். இப்படியான மரண பயத்திலே காடுகளுக்குள் புகுந்த பலர் இன்னமும் திரும்பி வரவில்லை என்ற செய்திகள் ஒருபுறமிக்க எந்தவித உணவோ, பானமோ இன்றி மரண பயத்தோடு காடுகளுக்குள் காலத் தைக் கழித்த அநேகமான சிறுவர்கள், குழந்தைகள் இன்று நோய்வாய்ப்பட்டு நடைப்பிணங்களாக திரும்பி வந்திருக் கின்றார்கள்.

தோட்டப்புற தமிழ் மக்கள் இவ்வளவு இன்னல்களையும் அடைவதற்கு காரணமாக அமைந்திருப்பது அவர்கள் தமிழர்களாக பிறந்துவிட்ட ஒரே காரணம் தான். அளுப்பொல தோட்ட லயங்களை தாக்கி தீயிட்டுக் கொளுத்திய சிங்கள இனவாதிகள் அங்கிருந்த ஒரே ஒரு கடையினை மாத்திரம் எதுவுமே செய்யாமல் மிகுதி வைத்திருக்கிறார்கள். தேடிப்பார்த்ததில் அது ஒரு சிங்களக் குடிமகனுக்கு சொந்தமான கடையென்றும் தெரிய வந்திருக்கின்றது. திட்டமிட்டே நடத்தப்பட்ட இந்த தாக்குதல் மாலை 5 மணிக்கு, 7 மணிக்கும் இடையில் நடத்தப்பட்டிருக்கின்றது.

தாக்குதல் முறைகள் அனைத்து தோட்டங்களிலும் கிட்டத்தட்ட ஒரே பாணியிலே இடம்பெற்றிருக்கின்றது. இனவாத கும்பலொன்று தோட்டக் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்த முற்படுவதாகவும் பாதுகாப்புத் தருமாறும் பொலிஸாரிடம் வேண்டுக் கோள் விடுக்கப்பட்டிருந்தாலும் சில இடங்களுக்கு ஏனோ தானோ என்ற வகையில் தாமதமாகவே பொலிஸார் வந்திருக்கின்றார்கள்.

பின்னர் அங்கு வந்து சேர்ந்த இராணுவத்தினரே நிலையை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்திருக் கிறார்கள்.

தாக்குதலில் சம்பந்தப்பட்டு அடையாளம் காணப்பட்ட பல சிங்களவர்கள் பற்றி தகவல் கொடுத்தும் அவர்களை சட்டப்படி கைது செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளத் தவறிய பொலிஸார், இரண்டு சிங்களவர்களை கொன்றதாக சந்தேகத்தின் பேரில் 14 தமிழர்களை உடனடி கைது செய்திருக்கிறார்கள். தீவைப்பு தாக்குதல் சம்பவங்களில் ஈடுப்பட்ட வெறியர்கள் குறிப்பிட்ட ஒரு பெரிய புள்ளியின் ஆட்கள் என்ற ஒரே காரணத்தினால் அவர்களை கைது செய்ய பொலிஸார் தயங்குவதாகக் கூறப்படுகின்றது. அரசியல்வாதிகள் தமது செல்வாக்கினையும் பயன்படுத்தி சிங்கள இனவாதிகளைத் தூண்டிவிட்டு தமிழ் மக்கள் மீது அநியாயமான தாக்குதல்களை தொடுத்த சம்பவங் கள் பல கடந்த காலங்களிலே நிகழ்ந்திருப்பது யாவரும் அறிந்த விடயமேயாகும்.

சம்பவங்கள் நடந்து முடிந்த பிறகு சாம்பல் மேடுகளாகக் காட்சியளித்தத் தோட்டக் குடியிருப்புகளையும், அகதிகளாக்கப் பட்டிருந்த தமிழ் மக்களையும் பார்வையிடுவதற்காக வருகை தந்த பெரிய புள்ளி ஒருவர் எரிந்து நாசமாகியிருந்த குடிசைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினபுரி, வேவல்வத்தை, அளுப்பொலை தோட்டங்களில் இடம் பெற்ற மோசமான வேதனைக்குரிய நிகழ்வுகள் சம்பந்தமாக மிகைப்படுத்தப்பட்ட காட்சிகளும், செய்திகளுமே முழு நாட்டிலும் பரவியிருக்கின்றன என்பதை அந்த வன்முறை நிகழ்வுகள் சம்பந்தமாக வெளியான செய்திகளிலிருந்து நன்கு புரிந்துக் கொள்ள முடிகிறது. ஆகவே இந்த இனவாத வன்முறை வெறியாட்டத்தின் பின்னணியிலே புதைந்துள்ள நிகழ்களை பற்றிய சத்தியமான செய்திகளை எழுதி மக்கள் முன் உண்மையை எடுத்து வைப்பது குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழ்பவன் என்ற வகையிலே எனது கடமையும், பொறுப்புமாகும் என்றே கருதுகிறேன்.

கட்டுரை ஆசிரியர்
ஆனந்த ரஞ்சித்

பட்டினியால், நோய் நொடிகளால் மாய்ந்து மடியும் தமிழ் குழந்தைகளின் விபரங்கள் என்பவற்றை எல்லாம் நீங்கள் தெரிந்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இல்லையேல் என்றாவது ஒருநாள் அவர்கள் கொதித்தெழுந்து நாமும் உங்களை போன்று மனித உயிர்கள்தான், எமக்கு இந்த நாட்டில் சுதந்திரமாக வாழும் உரிமை இருக்கின்றது, இந்த உரிமையை எமக்கு தாருங்கள் என்றும் கேட்டுத் போராடத்தான் போகின்றார்கள்.

நன்றி வீரகேசரி
28.10.1998

பார்த்து இந்த பழையலயம் அறைகளுக்கு தீயிட்டது அவ்வளவு பெரிய விடயமாக எடுக்க முடியுமா? என்று கூறினாராம்.

மேற்குறித்த சம்பவங்கள் தொடர்பாக தகவற் துறை ஊடகங்களும் குறுகிய மனப்பான்மையோடு ஒரு தலைப் பட்சமாகத்தான் செயற்பட்டிருக்கின்றன என்று கூறவேண்டும். சம்பவங்கள் நடைமப்பெற்ற இடத்திற்கு தகவற் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் செய்திப் பத்திரிகை நிருபர்களுக்கும் அங்கு நின்ற பொலிஸார் தரும் தகவல்களை தவிர வேறு எந்த விபரங்களையும் அலசி ஆராய்ந்து உண்மை செய்திகளை தெரிந்துக் கொள்ளமுடியாமற் போனது துரதிருஷ்டம் எனறே கூறவேண்டும்.

குறிப்பிட்ட சம்பவம் பற்றி சில பத்திரிகைகளில்திரித்துக் கூறப்பட்ட உ்ணமைக்கு மாற்றமான செய்திகளே பிரசுரமாகி இருந்தன. அரச தொலைக்காட்சி சேவையில் கூட பெயருக்கு எதையோ காட்டிவிட்டு, சிரித்த முகத்தோடுஅகதிகளுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கும் அரசியல் முக்கியஸ்தர்களை படம் போட்டு காட்டினார்களே தவிர எங்கு எரிந்து சாம்பல் மேடாகக் காட்சியளித்த எண்ணூறுக்கு மேற்பட்ட குடிசைகள், லயம் அறைகள் அவர்களுடைய எந்த கமராவுக்கும் தென்படவில்லை போல் தெரிகின்றது.

ஆனால் மாறாக தமிழ்ர்கள் சிங்கள கிராமத்திக்குள் புகுந்து இப்படியான வெளியாட்டங்களை ஆடி தீவைப்பு சம்பவங்களில் ஈடுப்பட்டிருந்தால் எமது தகவற்துறை சாதனங்களினின் செயற்பாட்டினையும் மனித நேயத்தினையும் நன்கு காணக் கூடியதாக இருந்திருக்கும்.

இந்த இலங்கை திருநாட்டிலே நேர்மையான மனிதர்களோ, பொதுக் கருத்துக் கொண்ட தகவற் தொடர்பு ஊடகங்களை சேர்ந்தவர்களோ உண்மையாகவே மனித உரிமை பற்றி பேசுகின்றவர்களோ இன்னமும் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றிருந்தால், பொலிஸ் அதிகாரிகளைப் பின்தொடர்ந்து வராமல் தைரியமாக குறிப்பிட்ட சம்பவம் நடைப்பெற்ற இடங்களுக்கு வாருங்கள். திறந்த வெளி சிறைசாலைகளுக்குள் நிகரான இந்த தோட்ட லயம் குடியிருப்புகளிலே தமிழ் மக்கள் என்ன துன்பங்களை அனுபவிக்கின்றார்கள் என்பதை உணர்ந்துக் கொள்ளும் வாய்ப்பு அப்பொழுது தான் உங்களுக்கு ஏற்படும். அதுமட்டுமல்ல இந்த கொடூரமான வன்முறை இனவெறியாட்டத் தீவைப்பு சம்பவத்தினால் இந்த தமிழ் மக்கள்கள் பட்டுத்தீர்ந்த, படுகின்ற அவஸ்தைகள், கொடுமைகள்,

## நிழலின் ஒத்திகை

முதலாளி தொழிலாளியின் உழைப்பால் தான் வாழ்கின்றான். தொழிலாளி இல்லையென்றால் உயர்வுமில்லை, வாழ்வுமில்லை. உண்மையில் தொழிலாளியிடம் தான் பணிந்திருக்க வேண்டும். ஆனால் நடப்பு நேர் மாறாக இருக்கிறது. என்றாலும் இறுதியில் தொழிலாளி காலடிக்கு தான் முதலாளி வந்து சேர வேண்டும் என்பதை

“மாடியிலிருந்து ஏசிய துரை
தொழிலாளியின் கால்களில்
விழுந்தான்
நிழலின் ஒத்திகை”

என்ற முரளிதரனின் ஹைக்கூ கவிதை காட்சிப்படுத்துகின்றது.

“மனிதன் தன்னுடைய அறிவை எந்தளவுக்கு தன்னுடைய தொழிலோட தொடர்புப்படுத்தி பார்க்கின்றானோ அந்தளவுக்கு அவன் வாழ்க்கையில் முன்னேறுகின்றான்” என்று ராபட் கிரீன் இங்கர்சால் குறிப்பிடுகின்றார். ஆனாரல் தொழிலாளி நாட்டின் நலத்திற்கே உழைக்கின்றான் அவன் வாழ்க்கை செக்கு மாடாய் உழலகின்றான். இந்நிலைமாற தொழிலையும், தொழிலாளியையும் உயர்த்த ஆவன செய்தல் வேண்டும்.

- ஹைக்கூ வடிவக் கவிதைகள் என்ற ஆய்வு நூலிலிருந்து.-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10ம் பக்க தொடர்ச்சி......

## தோ.பி.கூ.செ.அறிக்கை...

பிரச்சினைகளும், அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தாமை, தொழில் வழங்குவதில் பாரபட்சம் காட்டுதல், சமூக ரீதியான பாகுப்பாடு.

### 05. ஆதரவு திரட்டல்

அ. பெண்கள் பிரச்சினைகள்
ஆ. யாப்பு ரீதியான பிரச்சினைகள்
இ. சிறுவர் தொழிலும், துஷ்பிரயோ கமும், கல்வி சீர்த்திருத்தமும்.
ஈ. வீட்டு வசதிகள் பெருந்தோட்ட சுகாதார பகுதியை தேசிய திட்டத்தோடு ஒருங்கிணைத்தல், தனியார் தோட்டங்களில் தொழிலா ளர்களின் உரிமைகள் மறுக்கப்படுதல்.
உ. தனியார் தோட்டங்களை
ஊ. தொழிலாளர்கள் நலன்களை பறித்தல்
எ. குடியேற்ற திட்டங்களை அமைத்தல்

### 06. வெளியீடுகள்

அ. சிங்கள், தமிழ், ஆங்கில வெளியீடுகள் மூலம் அறிவூட்டலை ஏற்படுத்தல்
ஆ. தோட்ட பிரதேசங்களில் வாழும் எழுத்தாளர்களையும், கலைஞர் களையும் ஊக்குவித்தல் மற்றும் உதவுதல்.
இ. கலாச்சார செயற்பாடு
1. வீதி நாடகம்
2. சுவரொட்டிகள்
(பொது அபிப்பிராயத்தையும், அறிவூட்ட லையும் உருவாக்குதல்)

### எதிர்ப்பியக்கம்

எந்த ஸ்தாபனத்திலும் நிதி தொடர்பான ஊழல்கள் இடம்பெற்றதாக கண்டால் அந்த ஸ்தாபனத்திற்கான முகாமைத்துவ சபையொன்று நியமிப்பதற்கு வழிசெய்யும் வகையில் தொண்டர் ஸ்தாபன பணிகள் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவர மேற்கொள்ளப்படும் முயற்சிகளை எதிர்த்து இடம்பெற்ற எதிர்ப்பியக் கங்களில் தோ.பி.கூ.செ. கலந்துக் கொண்டது. தமது நடவடிக்கைகளை நிலைபேறான அபிவிருத்தியை நோக்கமாக கொண்டு திட்டமிடுதல், அமுலாக்கம் மதிப்பீடு செய்தல் நிறுவனங்களுக்கும் இலக்குழுக்களுக்கும் பூரண சுதந்திரம் இருக்க வேண்டும் என்பது எமது அசையா நம்பிக்கையாகும்.

### அனைத்துலக மனித உரிமை சாசனம் 50 ஆண்டு பூர்த்தி ஞாபகார்த்த விழா

மனித உரிமை சாசனத்தின் 50 ஆண்டு பூர்த்தி ஞாபகார்த்த விழாவையும் மலையக இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு குடியுரிமை மறுக்கப் பட்டதன் 50வது ஆண்டு நிறைவை யொட்டி சகோதர ஸ்தாபனங்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களுக்கும், விழாக்களுக்கும் எமது மனப்பூர்வமான ஆதரவை வழங்கினோம். எமது எதிர்கால நடவடிக்கைகளும், மனித உரிமை, கல்வி, செய்ற்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டமையும்.

### 'கோப்' புலமைபரிசில்கள

1998ம் ஆண்டுக்கான 13 பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. இதற்கான பரிசில் வழங்கும் வைபவமொன்று ஹட்டனில் யூன் 1998ல் நடைப்பெற்றது. க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான புலமைபரிசில் வழங்கும் நடவடிக் கைகள் தற்போது பரிசீரினையிலு ள்ளது. இத்திட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான பிதாபோல் கெஸ்பர்ஸ் அவர்களுக்கும், இப்புலமைப் பரிசிலை வழங்க உதவிய நிகழ்கால கோப் குழுவுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

### வெளியீடுகள்

இக்காலப்பகுதியில் குரலற் றோரின் குரல் (வொயிஸ் ஒப் த வொயிஸ்லஸ்) எனும் ஆங்கில சஞ்சிகை 4 முறை வெளியிடப்பட்டது. 'குன்றின் குரல்' தமிழ் சஞ்சிகை 2முறை வெளியிடப்படடது. உள்ளூரிலும், வெளியூரிலும் இச்சஞ்சி கைக்கு நல்ல வரவேற்புள்ளது. தோட்டங்களிலுள்ள வாசகர்கள் மத்தியில் 'குன்றின் குரல்' நல்லாதரவைப் பெற்று வருகின்றது. கிரமமான அடிப்படையில் குன்றின் குரலை வெளியிட அடுத்து வரும் ஆண்டுகளில் முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

### நிறைவுரை

1999 அக்டோபர் 17ம் நாள் தோ.பி.கூ.செ தனது வெள்ளி விழாவை கொண்டாடவுள்ளது. தோட்டப்பிரதேசங்களிலுள்ள கிராமங்களிலும், தோட்டங்களிலும் சலுகையற்ற வகுப்பினரும் அரும்பெரும் பணிகள் செய்வதற்கென குழுக்களை உருவாக்கி ஒருங்மைப்பு செய்துள்ளமை பற்றி நாம் மகிழ்ச்சியடைகின்றோம். புதிதாக இனம் கானப்பட்டுள்ள அடிப்படையில் செயலாற்றுவதற்கு நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். அண்மைக்காலத்தில் எமது நடவடிக்கைகளைஓரளவுக்கு பின்னடைவு செய்யும் வகையில் ஒரு சில நெருக்கடிகள் இருந்துள்ளன. எதிர் காலத்தில் எமது நடவடிக்கைகளை மேம்பட்ட வகையில் முன்னெடுத்துச் செல்ல உகந்த சூழ்நிலை உருவாகும் என்பதில் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது.

கிருஸ்டியன் எய்ட், கோப் ஆகிய நிறுவனங்கள் கடந்த காலங்களில் எமக்கு அளித்து வந்துள்ள ஆதரவுக்காகக அவற்றிற்கு நன்றி கூறுகின்றோம். எதிர் காலத்திலும் தோ.பி.கூ.செ. யின் இலட்சியங்களை அடையும் வகைளில் தர்மீக ஆதரவையும், நிதி உதவியையும் நலன் நாடிகளிட மிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பது எமது நம்பிக்கை. தோ.பி.கூ.செ. யின் நண்பர்களினதும், நலன்நாடிகளினதும் ஆதரவுக்கும் உற்சாகத்திற்கும் அங்கத்துவ அமைப்புகள் வழங்கிய ஒத்துழைப்புக ளுக்கும் மனமுவந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஜே.பிரான்சிஸ்**
செயலாளர்
16.12.1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடேசய்யரின் நாமம் வாழ்க!

சாரல் நாடன்

நாடற்றவர்களாக ஒரு சமூகத்தினர் ஆக்கப்பட்ட கொடூரம் நடேசய்யர் இறந்த ஓராண்டு இடைவெளிக்குள் ஏற்பட்டது. நடேசய்யரின் பணியை விட்ட இடத்திலிருந்து எடுத்துச் செல்ல எவருமில்லாததால் ஏற்பட்ட இந்த இழிநிலையிலிருந்து மலையகம் மீள்வதற்கு இதுநாள் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

நடேசய்யர், மலையகத்தின் நிர்மாணச்சிற்பி என்பதை முழு உலகமும் இன்று ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த நூற்றாண்டின் முதல் பாதியில் அவர் கொடிகட்டிப் பறந்தார்.

அவர் இந்தியாவில் பிறந்து இலங்கையில் குடியேறி வாழ்ந்தார். அவரது காலப்பகுதி (1920 - 1947) இலங்கையில் அரசியல் பத்திரிகைத் துறை, சமூகசீர்த்திருத்தம், பெண் விடுதலை, தொழிற்சங்க துறை, மலையக இலக்கியம், இந்து சமயப்பணி என்று பலதரப்பட்ட விதத்தில் - அவரது ஆற்றலையும் செயல் திறனையும் வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

வரலாறு மறக்காத இந்த செயல் வீரனின் பெருமை இன்று கடல் கடந்த நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது. ஜெர்மனி, அஸ்திரேலியா, தமிழகம் என்று அவரது பெருமை பரவி அவரது நூற்றாண்டு நிறைவு நிகழ்ச்சிகள் அங்கெல்லாம் நடாத்தப்படுகின்றன.

இலங்கைத் தீவில் பல சாதனைகள் செய்து முடித்த கோ.நடேசய்யர் 7-11-1947ல் மரணித்தார். அவருக்கு அப்போது வயது ஐம்பத்தாறு.

நடேசய்யர் இலங்கையில் வாழ்ந்த போது இங்கு ஆங்கிலேயர் அரசோச்சினர். ஆங்கிலேயர் இங்கு மேற்கொண்ட பெருந்தோட்ட விசாலிப்பு முயற்சிகளுக்கென்று கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவளியினரின். சந்ததயினரே 'மலையகத் தமிழர்' என இன்று தம்மை காட்டிக்கொண்டு இருக்கின்றனர்.

இவர்களுக்கென்று தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட நடேசய்யரின் மரணச் செய்தியை ஒப்சேவர், டெய்லி நியூஸ், டைம்ஸ் ஒ·வ் சிலோன் என்ற இலங்கையின் முன்னணி ஆங்கில ஏடுகள் முதல் பக்கத்தில் அவரது படத்துடன் வெளியிட்டு முக்கியத்துவம் கொடுத்தன.

"தோட்டத் தொழிலாளர்களின் கஷ்ட நஷ்டங்களை முதன் முதலில் உலகறிச் செய்தவர். நடேசய்யர் ஒரு தர்மவீரன், எதற்கும், யாருக்கும், எங்கும், எப்பொழும் அவர் அஞ்சியதில்லை" என்று எழுதியிருந்த வீரகேசரி தனது பங்குக்கு " இலங்கை இந்திய சமூகம் ஒரு பெரிய அறிவாளியை இழந்து விட்டது." என்றும் குறிப்பிட்டிருந்நது.

நடேசய்யரின் சட்டசபை பிரதிநிதித்துவத்தையும், பத்திரிகை தொழில் முயற்சியையும் குறிப்பிட்டெழுதிய தினகரன் "நடேசய்யர் ஒரு சமயம் தமது நிறுவனத்தில் பத்திராதிபராக இருந்தார்" என்ற செய்தியையும் வெளியிட்டு இருந்தது. காலனித்துவ ஆட்சியில் இத்தகு வியக்கத்தக்க சாதனைகளைப் புரிந்த நடேசய்யர் நூற்றாண்டு கண்ட மலையக தலைவர்களில் மிக முக்கியமானவர்.

மலையகத்தமிழரின் பிரச்சினைகளில் தம்மை ஈடுப்படுத்திக் கொண்டதன் காரணத்தால் முக்கியத்துவம் பெற்றவர்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றார்கள்.

அவர்களில் இருவர் தூக்கிலிடப்பட்டார்கள். சிலர் நாடு கடத்தப்பட்டு இருக்கின்றார்கள். வேறும் சிலர் சிறையில் அடைக்கப் பட்டிருக்கின்றார்கள். மற்றும் சிலர் பைத்தியக்காரர்கயாகக் கருதப்பட்டு அங்கொடைக்கு அனுப்பப்பட்டிருக் கின்றார்கள். இன்னும் சிலர். துப்பாக்கக்கு இரையாக்கப்பட்டு ள்ளார்கள். பெரும்பாலானோர்கள் நித்திய வாழ்க்கையிலேயே தொழில் பறிக்கப்பட்ட நிலையில் நடுத்தெருவில் நிர்கதியாக்கப் பட்டுள்ளார்கள்.

இத்தனைக் கொடுமைகளுக்கும் மத்தியில் நிமிர்ந்த நடையும். நேர்கொண்ட பார்வையும். ஆகச் செயல்பட்ட ஒருவராக நடேசய்யர் விளங்கு கின்றார்.நாடு கடத்தப்பட்ட வர்களுக்காக சட்ட சபையில் அவர் வாதிட்டார்.

சிறையில் அடைக்கப்பட்ட வர்களுக்காக அவர் பேச்சாலும். எழுத்தாலும் போராட்டம் மேற்கொண்டார். சித்தப் பிரமைக் கொண்டவர்களாகக் குறிப்பிடப்பட்டச் சிலருக்காக அவர் நாட்டின் அதி உன்னத பதவி வகிக்கும் தேசாதிபதி அவர்களை நேரில் கண்டு விண்ணப்பம் செய்தார். இவைகளின் காரணமாக நடேசய்யர் என்ற இந்திய வம்சாவளித் தமிழன் இலங்கைத் தீவினின்றும் அப்புறப்படுத்தப் படுவதற்கான அபாயம். சூழ்ந்தது. குறைந்த பட்சத்தில் இலங்கை தீவுக் குள்ளாகவே உயிரிழக்கும் ஆபத்தும் எற்பட்டது. இந்த இரண்டு விபத்துக்களையும் நடேசய்யர் தான் வகித்த சட்டசபை உறுப்பினர் பதவியால் இலகுவில் தவிர்த்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டசபை உறுப்பினர் பதவியில் அவரது காலப்பகுதியில் - இந்திய வம்சாவளியினருக்காக அமர்ந்திருந் தவர்களின் ஆதாம் அலி, இக்னேஸியஸ் பெரைரா, பெரிசுந்தரம் என்ற சிலர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் இக்னேஸியஸ் பெரைரா, பெரிசுந்தரம் என்ற இருவரும் மிதவாதிகள். இந்த இருவருக்கும் சுதந்திரம் பெற்ற இலங்கை அரசாங்கம் முத்திரை வெளியிட்டுக் கௌரவம் செலுத்தியுள்ளது. இந்த இருவரும் காலனித்துவ காலப்பகுதியில் அமைச்சர் பதவிகளை அலங்காரம் செய்துள்ளனர்.

நடேசய்யர் காலனித்துவம் காலப்பகுதியில் இலங்கையில் ஆங்கிலேயருக்கு எதிராக குரலெழுப்பியவர். அவர்களின் ஆட்சி அகற்றப்படுதல் வேண்டுமென்று கொடிப்பிடித்தவர். அவர்களுக் கெதிராக ஆயிரக்கணக்கில் தொழிலாளர்களை ஒன்று திரட்டி கூட்டம் நடத்தியவர், அட்டன் புகையிரத நிலையத்தில் பல்லாயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்களை ஒன்று திரட்டி இலங்கை ஆட்சியாளரையும் - இங்கிலாந்து அரசாங்கத்தினரையும் நடுங்கவைத்தவர்.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் வெறுப்புக்குள்ளா னவர்கள், சுதந்திரம் பெற்ற இலங்கையில் கௌரவம் பெற்றுள்ளனர். இது இயல்பானதொன் றேயாகும். ஆங்கில காலப்பகுதியில் ஆதரிக்கப்பட்டவர்கள் தேசிய எழுச்சியின் பின்னால் புறக்கணிக்கப் பட்டுள்ளார்கள், அல்லது எதிர் முகாமுக்குச் சென்றுள்ளார்கள். இதுவும் இயல்பான ஒன்றேயாகும்.

இந்த இயல்புக்கு மாறாக ஆங்கிலேயர்கள் கோலோச்சிய காலத்தில் ஆட்சியாளர்களுக்கு விரோதமானவர்களும், "பிரிட்டிஸாரே எச்சரிக்கை" என்று தனது பத்திரிக்கையில் எழுதியதன் மூலம், ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்களைத் துாண்டியவாரகவும் கருதப்பட்டு ஓரம் கட்டப்பட்ட நடேசய்யர், சுதந்திரம் பெற்ற இலங்கையிலும் கௌரவம் பெறவில்லை. சுதந்திரம் பெற்ற இலங்கையிலும் உரிமைக்காக போராடிய மலையக தமிழ்ர்கள் மத்தியிலும் சிறப்பிக்கப்படவில்லை. இதன் காரணம் என்ன?

சிறகு முளைக்காததற்கு முன்பேயே பறவை குஞ்சுகளை பறக்க வைப்பதற்கு அவர் முனைந்தார் என்பதாலா? எழுந்து நிற்கும் முன்பேயே குழைந்தைகளை ஓடவைப்பதற்கு அவர் பிரயத்த னித்தார் என்பதாலா?

ஆசை நிறைதாலும், பாசம் மிகுந்தாலும் தந்தை நிலையிலிருந்து ஒருவருக்கு இயல்பாக ஏற்படக்கூடிய பிரிய வெளிப்பாடுகளை உரிய நிலையில் விளங்கி கொள்வதால் ஏற்படும் விளைவுகளைப் பிள்ளை நிலையிலிருப்போர் எதிர்கொண்டாக வேண்டியது தவிர்க்கப்பட முடியாத ஒரு நிர்ப்பந்தமாகும்.

இந்திய தமிழர் இலங்கையில் வசிப்பததையும் உரிமையற்ற நிலையையில் வெறும் உடல் உழைப்புள்ளவர்களாகக் இருப்பதையும் பலரும் விரும்பினர். ஆட்சியாளர், அரசியல் வாதிகள், தோட்ட சொந்தகாரர்கள், என்ற பலரும் இதற்கு விதிவிளக்கள்ள.

இலங்கை சுதந்திரம் அடைந்த பிறகும் இந்த மனோபாவம் நீடித்தது.

1947ல் நாடாளுமன்றம் தேர்தலில் தமக்கு இருந்த வாக்கு பலத்தை பயன்படுத்தி எழுவரை தேர்ந்தெடுத்தாலும், யூ.என்.பி. அரசியல் கட்சிகெதிராக பதின்மரைத் தேர்ந்தெடுக்கத் தமது வாக்குகளை பயன்படுத்தியதாலுமே ஆகும் என்பது இன்று சகல மட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

இந்தக் கொடுமை நாடற்றவர்களாக ஒரு சமுகத்தின் ஆக்கப்பட்ட கொடூரம் நடேசய்யர் இறந்த ஓராண்டு இடைவெளிக்குள் ஏற்பட்டது. நடேசய்யரின் பணியை விட்ட இடத்திலிருந்து எடுத்துச் செல்ல எவருமில்லாததால் ஏற்பட்ட இந்த இழிநிலையிலிருந்து மலையகம் மீள்வதற்கு இதுநாள் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

தோட்டபுற மக்களின் வரலாற்றை நுணுகி ஆராய்ந்த நடேசய்யர் அவர்களின் மன எழுச்சிக்களை துாண்டுவிக்கும் விதத்தில் பணிகளை ஆற்றினார். அவரது எழுத்துக்கள் ஆரம்பக் காலத்தில் பத்திரிகை வாயிலாகவும் பின்னர் நூல்கள் வாயிலாகவும் மக்கள் எழுச்சிக்குப் பயன்பட்டன.

தமிழகத்தில் நவசக்தியிலும், தேசபக்தனிலும் வெளிவந்த அரசியல் எழுத்துக்கள் திரு.வி.க. அவர்களை இந்தியாவிலிருந்து நாடுகடத்தும் நிலைமைக்கு உள்ளாகிய போது அவரது சமகால அரசியல் வாதிகளின் தலையீட்டால் அது தவிர்க்கப்பட்டது. இலங்கையில் தேசநேசன், தேசபக்தன் தி சிடிஷசன் என்ற ஏடுகளின் நடேசய்யரின் எழுத்துக்கள் அவருக்கு அத்தகு ஆபத்தை உண்டுவித்த போதும், தானே சட்டசபை உறுப்பினராக விளங்கியமையால் நாடு கடத்ததும் அபாயத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடிந்தது. தமிழகத்தில் தமிழ் அரசியல் பேசவும், எழுதவும் முடியுமென்பதை 1917ல் திரு.வி.கவே செய்து காட்டினார் என்பார்கள். நடேசய்யர் திரு.வி.கவை பல வழிகளில் பின்பற்றி நடந்து வந்தார். அவருக்கு கீழ் பணியாற்றியவர் இலங்கையில் தமிழில் அரசியல் கருத்துக்களை எழுதுவதற்கு பத்திரிகைகளை பயன்படுத்தியும், மேடை பேச்சுக்களை உருவாக்கியும் புதிய வழி சமைத்தவர் நடேசய்யர் ஆவர். தனது பத்திரிகைகளை வரலாற்று பதிவேடுகளாக விட்டு சென்றுள்ள பெருமை அவருக்குண்டு. தோட்ட மக்கள் இன்று வரை சுதந்திர பிரஜைகளாக உருவாகவில்லை. அவர்களது வரலாறு முழுக்க அவர்களை பிறரில் சார்ந்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோ. நடேசய்யர்.

மக்களாகவே வெளிக்காட்டப் பட்டிருக்கின்றது. ஆரம்பக்காலத்தில் பெரிய கங்கானிகள் என்றும், பின்னால் தோட்டத்துறைமார்கள் என்றும், தற்போது தொழிற்சங்கள் என்றும் அவர்கள் தமது வாழ்க்கையை பிறசக்தியில் சார்ந்திருந்தார்கள்.

தொழிற்சங்கங்கள் உழைப்பாளர்களின் சக்தி மிகுந்த பாசறைகளாகும். மலையகத்தைப் பொறுத்தவரை இது உழைப்பாளர்களைத் திசைக் கொருவராக பிரிப்பதற்கே இன்று உதவியுள்ளது. இன்று பதினேழு தொழிற்சங்கங்கள் மலையகத்தில் செயல்படுகின்றன. இந்த பிரிவு நடேசய்யரின் காலப்பகுதியிலேயே ஆரம்பமாகி விட்டது. 1940 களில் பன்னிரண்டு தொழிற்சங்கங்கள் மலைநாட்டில் செயல்பட்டன. (ஆதாரம்- பிளாண்டர் ரிவ்யூ - பெப்ரவரி 1947)

மலையகத்தில தொழில் சங்கத்தை நிறுவிய நடேசய்யர் இந்த ஒற்றுமையின்மையைக் கண்டு தனது இறுதிகாலத்தில் மனம் நொந்து போனார். மனிதர்களுடைய நிழலிலே மனிதனை காண முயல்வது இக்காலக்கட்டத்தின் தேவைகளில் ஒன்று

செயற்கரிய செயல்களை செய்து தனது தடத்தை விடடுச் சென்ற மனிதர்களுக்கு நினைவு தினம் கொண்டாமுவது இந்த முயச்சியை முன்னெடுத்துச் செல்லும் ஒரு வழி முறையாகும். இன்னும் ஒரு படி மேலேச் சென்றுஅவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் அமைத்தும் சிலைவடித்தும், நினைவாலயங்கள் எமுப்பியும், ஆராய்ச்சி நிறுவனங்கள் அமைத்தும் இந்த முயற்சிகள் பல விதங்களில் மேற்கெள்ளப்படுகின்றன.

அரசியல் செல்வாக்கும் ஆட்சியாளரின் ஆதரவும் பெறக்கூடிய நேரத்தில் அவைகள் கல்லூரிகளாக உருவாவதற்கும பல்கலை கழகங்களாக உருவெடுப்பதற்கும் வழி பிறப்பதுண்டு. நடேசய்யரின் நூற்றாண்டில் இந்த வழியில் சிந்தித்து செயல்பட வேண்டியது மலையகத் தமிழரின் கடமையாகும் . நன்றி மறந்தவர்களாக காணப்டும் எந்த ஒருவருமே வாழ்க்கையில் மிளிர்வதில்லை, ஒரு சமுதாயத்தின வளமும், வளர்ச்சியும் இந்த போக்கிலேயே அமைகின்றன.

விரைவில் குடியரசு நாடாக மலர்ந்த போது மொரிஸியஸ் தீவில், தமது வளர்ச்சிக்குத்துணை நின்றவர்களில் ஒருவரான மகாத்மாகாந்தியைப் போற்றும் மக்கள் அவர் நாட்டுக்கு விஜயம் செய்து 90 ஆண்டுகளை நினைவுபடுத்தும் விதத்தில் இந்தாண்டு நவம்பர் நான்கு நாட்களுக்கு வண்ணமிகு நிகழ்ச்சிகளை நடாத்தி நன்றி செலுத்தினார்கள்.

•

மலையகத்தில் இன்று பூத்துக்குலுங்க ஆரம்பித்திருக்கும் மலர்ச்சிக்கு வித்திட்டவர் கோதண்டராம நடேசய்யர் அவர்கள்

அவரது நூற்றாண்டு நினைவின் போது நன்றி தறந்தலர்கள் என்ற குற்றசாட்டுக்கு உட்படாதவர்களாக மலையக சமூகத்தினர் செயற்படுவார்கள் என்று நம்புவோமாக. அநந் நம்பிக்கையை நாளும் வளர்ப்போம், நடைமுறை படுத்துவோம்.

நடேசய்யரின் நாமம் வாழ்க!


சாரல் நாடன்
எழுதிய
பத்திரிகையாளர் நடேசய்யர்
(ஆய்வு நூல்)
விபரங்களுக்கு
மலையக வெளியீட்டகம் த.பெ.எண். 32 கண்டி.
வாசிக்கத் தவறாதீர்கள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளோயா போராட்டம்

சட்டத்தரணி வேர்ணன் குணசேகர

**தே**யிலைத் தோட்டங்களில் கொத்தடிமைகளாக வேலை செய்த தேயிலை உற்பத்தியின் முன்னோடிகளான வெள்ளையர்களால் தென்னிந்தியாவிலிருந்து பெரிய கங்காணிமார்களின் மூலமாக கொண்டு வரப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் வரலாறு ஆண், பெண், குழந்தைகள் என்ற பாகுபாடின்றி கடின உழைப்பு, கண்ணீர், மரணம் என்ற ரீதியிலேயே இன்றுவரை தொடர்கின்றது.

1940 களில் முள்ளோயா கோவிந்தன் கண்டி பொலிஸ் சார்ஜண்ட் சுரவீரவால் சுட்டுக் கொல்லப்பட்ட வரை வாழ்நாள் முழுவதையும் நிர்ப்பந்த அடிமைகளாக கழித்த வீரர்களைப் பற்றிய, வீராங்கனைகளைப் பற்றி வரலாறு அறிந்திருக்கவில்லை.

முள்ளோயா கோவிந்தனின் மரணம் 100 ஆண்டுகளுக்கு மேலாக கெடுபிடிகளின் காரணமாக சகித்துக் கொண்டிருந்த தொழிலாயர்களை வீறு கொண்டெழச் செய்ததன் மூலம் தோட்டத் தொழிற்துறையின் சரித்திரத்தையே மாற்றியமைத்தது.

ஊவா மாகாணத்தில், தொழிலாளர்களை அடக்கி எடுக்க பொலிஸாரின் உதவியை நாடிய நிர்வாகங்களுக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்தனர்.

முள்ளோயா தோட்டத்துரை ஸ்பாவின் துப்பாக்கி முனையில் தோட்டத் தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடாது தடுத்து தோட்டத்தில் அமைதியை நிலைநாட்ட திட்டமிட்டார். கோவிந்தன் மரணத்தின் உண்மையான பின்னணி இதுவேயாகும். கார்களிலும் ஜீப்களிலும் தோட்டத்துக்கு சென்ற பொலிஸாரை லய முற்றங்களில் கூடிய தொழிலாளர்கள் பார்ப்பதும் சில வேளைகளில் அவர்களை நோக்கி கூக்குரல் இடுவதும் வழக்கமாயிருந்தன.

லங்கா சமசமாஜக் கட்சியின் நிறமான சிவப்பு நிறச் சட்டையணிந்த கோவிந்தன் லயத்திலிருந்து பாதையைக் கடந்த போது நூற்றுக்கணக்கான தொழிலாளர் முன்னிலையில் சார்ஜண்ட் சுரவீரவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சம்பவத்துக்கான தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்க விசாரணை ஆணைக்குழுவின் முன் பெருமுயற்சி செய்த பொலிஸாரினால், தமது கூற்றுக்களை நிரூபிக்க ஒரு தொழிலாளியின் ஆதரவைத்தாயினும் பெற முடியாது போய்விட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் சிவப்புச்சட்டை அணிந்திருந்த கோவிந்தனை இலங்கை சமசமாஜக் கட்சித் தலைவர் வேலுசாமி என நினைத்தே சார்ஜண்ட் சுரவீர துப்பாக்கியால் சுட்டார் என்பது தெளிவாகியது.

கொலைக் குற்றத்துக்கு தண்டனை மரணம் என்பது எமது நாட்டுச் சட்டம். ஆணைக்குழு தனது அறிக்கையில் துப்பாக்கிச்சூடு சட்ட விரோதமானது எனக் குறிப்பிட்டது. ஆனால் சார்ஜண்ட் சுரவீரவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இன்றைய நிலையில் என்றால் கோவிந்தனின் விதவைக்கு போதிய நட்டஈடாவது வழங்கப்பட்டிருக்கும். ஆனால் பிரித்தானிய அரசு அவ்வாறு செய்யவில்லை.

பெருந் தோட்டத் தொழிற்றுறையில் முதலாளி - தொழிலாளி உறவு நூல் இழையில் தொங்கிக் கொண்டிருந்த நிலையில்தான் முள்ளோயா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நிகழ்ந்தது.

1920 பிற்பகுதியில் தென்னிந்திய பிராமணரான கோ. நடேசய்யரால் நிறுவப்பட்ட சிறு சிறு குழுக்களே பிற்காலத்தின் தோட்ட நிர்வாகத்தினதும் கங்காணிகளினதும் கெடுபிடிகளுக்கெதிரான கூட்டு நடவடிக்கைகளுக்கான தொழிற்சங்க அமைப்புக்கு கருவூலமாக விளங்கின.

நடேசய்யருடன் தொடர்பு கொண்ட தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டனர். தோட்டங்களுக்குள்ளோ வெளியிலோ கூட்டம் நடத்த மைதானத்தையோ கட்டிடத்தையோ பெற்றுக் கொள்ள முடியாதவாறு தோட்ட நிர்வாகத்தினரும் நகர முதலாளிமார்களும் நடேசய்யருக்கு விரோதமாக செயல்பட்டனர். எந்த நேரத்திலும் அவருக்கு உயிராபத்து ஏற்படக்கூடிய நிலையை உணர்ந்த வெள்ளையர் அரசு கைத்துப்பாக்கி வைத்திருக்க நடேசய்யருக்கு அனுமதி வழங்கியது.

நடேசய்யர் தங்கிய சுற்றுப் புறத் தோட்டங்களில் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அரிசியை நிறுத்தியது.

அட்டனை தலைமையகமாகக் கொண்டு இயங்கிய நடேசய்யர் 1936 பொதுத்தேர்தலில் அன்று இந்திய தோட்டத் தொழிலாளர்களின் சட்டசபை பிரதிநிதியாகவும் தொழில் அமைச்சராகவும் இருந்த இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். பெரியசுந்தரத்துடன் போட்டியிட்டார்.

வருடக்கணக்காக தலைமைக் கங்காணி முறைக்கும் குறிப்பிட்ட ஒரு தோட்டத்துக்கு தொழிலாளியை பரம்பரை அடிமையாக்கும் துண்டு முறைக்கும் எதிராக போராடிய நடேசய்யரின் எளிமையான தேர்தல் சுலோகம் குறைந்த பட்ச சம்பளத்தை மேலும் குறைக்கும் மனிதரை தூக்கியெறி என்றவாறு அமைந்தது. (உலகப் பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடியினால் ஏற்பட்ட தேயிலை விலை வீழ்ச்சிக்கு ஈடுகொடுக்குமுகமாக தொழில் அமைச்சர் என்ற முறையில் திரு. பெரி சுந்தரம் தேயிலைப் பயிர்ச்செய்கைத் துறையின் நலன் கருதி தொழிலாளர் அடிப்படைச் சம்பளத்தைக் குறைக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தத்துக்கு பணிய வேண்டியவரானார்.)

ஆனால் ஒருபோதும் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் தேயிலை விலைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படவில்லை.

ஒவ்வொரு தொழிலாளியும் ஆண், பெண், சிறுவர் என்ற வித்தியாசமின்றி ஒவ்வொரு மாதமும் 26 லிருந்து 20 நாட்கள் கட்டாயமாக வேலை செய்ய வேண்டும்.

தகப்பன், தாய், வயதுவந்த பிள்ளை, குழந்தை என்ற நால்வரைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு ஒரு மாதத்துக்கு தேவையான அரிசி, உப்பு, சீனி, பலசரக்கு, மண்ணெண்ணை ஆகியவற்றின் மொத்த விலை 16 நாட்களால் பிரிக்கப்பட்டு வரும். பின்னர் ஆண், பெண், சிறுவர் என்ற அடிப்படையில் பிரித்தானிய சிவில் அதிகாரியொருவரால் தரப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த நாட் சம்பளத்தைப் பெற ஒரு தொழிலாளி கட்டாயமாக வேலை செய்ய வேண்டும். இதுதான் ஆகக்குறைந்த நாட் சம்பறத்தைப் பெற அன்று தோட்டத் தொழிலாளாருக்கு இருந்த மனிதாபிமானமற்ற தகுதி.

தன்னுடைய குடும்பத்தில்சாவு, சடங்கு, பெருநாள், நன்னாள் மற்றும் நோய் நொடிகளுக்கு விமேசனம் பெற, தலைமைக் கங்காணியிடமிருந்து வட்டிக்கு கடன் வாங்கித்தான் ஆக வேண்டும் என்ற பரிதாப நிலையில்தான் தோட்டத் தொழிலாளி இருந்தான்.

நாளாநத குறைந்த பட்ச (போஷாக்கற்ற) உணவுத் தேவையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட நாட் சம்பளம் சிறு சிறு மாற்றங்களைப் பெற்று நீடித்தது.

பொதுத் தேர்தலின் பின் சட்டசபையிலும் வெளியிலும் நடேசய்யருடன் கூட்டுச் சேர்ந்த இலங்கை சமசமாஜக் கட்சியின் தொழிற்சங்கம் அமைக்கும் பணி துரைமார் அரசு என்று பின்னால் வர்ணிக்கப்பட்ட அரசின் கெடுபிடிகளுக்கு இலக்கானது.

நடேசய்யரின் தனி நபர் கோரிக்கைகளும் தொழிலாளர் - விவசாயி ஆட்சி அமைவுக்கு முதற்படியாக வெள்ளயராட்சி தூக்கி எறியப்பட வேண்டும் என்ற இலங்கை சமசமாஜக் கட்சியின் கோரிக்கையும் ஒன்று சேர்ந்த நிலையில் தொழிலாளர்கள் இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைமையில் வெளிப்படையாக நம்பிக்கை கொண்டனர். அடக்கப்பட முடியாத அளவுக்கு பலம் பெற்ற இ. ச. ச. கட்சியின் விரலசைவுக்காக தொழிலாளர்கள் காத்திருந்தனர்.

அத்தகைய உத்வேகத்தை பெற்றிருந்த நிலையிலும் சமசமாஜக் கட்சி போதிய தமிழறிவை பயிற்சியைப் பெற்ற ஊழியர்களைக் கொண்டிருக்கவில்லை. எனினும் இலங்கையில் சோஷலிஸத்தை கட்டியெழுப்பும் போராட்டத்தின் முக்கிய தொழிலாளி வர்க்க சித்தாந்த ரீதியாக இ. ச. ச. கட்சி நம்பியமை ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய அம்சமாகும். இ. ச. ச. கட்சி ஸ்தாபகர் பிலிப் குணவர்தன தோட்டத் தொழிலாளர் போராட்டங்கள் புரட்சிக்கு இன்றியமையாத தலைமைத்துவத்தை வழங்கும் என்பதில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தார்.

இந்நிலையில் இடமபெற்ற முள்ளோயா துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஊவாப் பகுதி தோட்டத் தொழிலாளர்களை வெகுண்டெழச் செய்தது. இ. ச. ச கட்சியின் தலைமையின் கீழ் தோட்டத் தொரிலாளர்கள் நடத்திய தொடர்ந்த போராட்டங்களின் முன் அரசின் ராணுவ, ஆயுத பலம் செயலிழந்து போயின.

இந்நிலையில் இ. ச. ச. கட்சியை சட்டவிரோத இயக்கமாக்க பிரகடனப்படுத்திய அரசு, அக்கட்சியின் அல்லது அங்கத்தினரின் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் தண்டனைக்குரிய குற்றமாக பிரகடனம் செய்தது. கட்சியின் முக்கிய தலைவர்கள் நால்வரைக் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்தது. திறமையற்ற வழி நடத்தல் கட்சியின் இரகசிய இயக்கங்களையும் செயலிழக்கச் செய்தது. தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் திட்டமற்ற முறையில் தொடர்ந்தது.

அதி தீவிர இயக்கத்தின் முதுகெலும்பை முறித்த இந்நிலையிலும் கைத்தொழில் துறையில் முதலாளி தொழிலாளி உறவின் அவசியத்தை உணர நிர்ப்பந்திக்கப்பட்ட அரசு 1942ல் நிர்வாக ஸ்தாபனங்களையும் தொழிற்சங்கங்களையும் அடங்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தியது. இப்பேச்சுவார்த்தை தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமை அங்கீகாரம், தொழிற்சங்க பிணக்கு மீது பேச்சுவார்த்தை, சமாதான தீர்வு - மத்தியஸ்தம் ஆகியவற்றுக்கு வழி செய்து பிரசித்தி பெற்ற 7 அம்ச ஒப்பந்தத்தை உருவாக்கியது. இவ்வொப்பந்தத்தில் இ. ச.ச கட்சியின் சார்பில் நானும் நடேசய்யரும், இலங்கை இந்தியர் காங்கிரஸ் சார்பில் ஜி. எஸ். மோத்தாவும் கையெழுத்திட்டோம். (அன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இருக்கவில்லை. அது தோன்றியதே 1953ல் தான்.)

பல நாள் விவாதத்தின் பலனாக பிறந்த 7 அம்ச ஒப்பந்தத்தின் இன்னைய தொழிலாளர், கைத்தொழில், சேமநல சட்டங்களின் முன்னோடி.

**1985 மே மாதம் எழுதப்பட்ட கட்டுரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைக்கமட்டுமே பிறந்தவர்கள்

***ஆங்கிலத்தில் சி.வி வேலுப்பிள்ளை***
***தமிழ் வடிவம் மூ. சிவலிங்கம்***

அந்தக் கிழவன் சாலையோரத்தில் உட்கார்ந்திருந்தான். முதுமையின் இலக்கணமாய் கூன் விழுந்து .... உடல் தளர்ந்து சிறுத்துப் போன சின்ன உருவமாய் அவன் காட்சி தந்தான்.

அவனருகில் பிச்சை வாங்குவதற்கான ஒரு தகரக் குவளையும் துணைக்கு ஒரு ஊன்றுகோலும் கிடந்தன. எதிர்ப்புறத்தில் ஓர் அழகிய சிற்றாறு நளினமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அவனுக்குப் பின்னால் .... தூரத்தில் ... தேயிலைச் செடிகளின் பசுமை ... அந்த மலைக்குன்றுகளின் மேல் பச்சையால் அள்ளிப் பூசப்பட்டிருக்கிறது.

அந்த ஏகாந்தச் சூழலில் அவனும் ஒருவனாய் இரண்டரக் கலந்திருந்தான். அந்த மனிதனின் முன்னைய வாழ்க்கை அவனது பூர்வீகம் எப்படியிருந்திருக்கும் என்று நான் யோசிக்கிறேன்.

இளமைக் காலத்தில் அவன் எப்படி இருந்திருப்பான் ...? அவனுக்கு சொந்தம் - சுற்றம் என்று ஒரு குடும்பப் பிணைப்பு இருந்திருக்குமா...? குறைந்தபட்சம் இரவில் படுத்து எழும்புவதற்கு ஒரு இஸ்தோப்பு அறையாவது இருந்திருக்குமா...?

ஆம் அவன் எல்லாவற்றையும் இழந்தவனாகவே காணப்படுகின்றான். எதிர்காலமும் அவனை அச்சுறுத்திக் கொண்டிருப்பதாக ஒரு தாக்கமும் அவனுள் தெரிகிறது.

அந்த மலைக்கும், ஆற்றுக்கும் இடையில் அந்தப் பாதையோரத்தில் உருவழிந்து கிடக்கும் ஒரு சிதைந்த வீட்டைப் போல அவன் இன்னும் சமைந்திருந்தான். நான் அலுவலகம் நோக்கிச் செல்கிறேன். அந்த நிர்க்கதியான உருவம் .... படமாய் என் மனதில் பதிந்துவிட்டது. அது அலுவலகம் வரை என்னுள் தொடர்ந்து வருகிறது.

இளங்காலைப் பொழுது முடிந்து பகல் புழுக்கம் ஆரம்பம். எனது வேலைப்பளு உக்கிரமடைகிறது. ஜனங்களின் சந்தடி ... ஜன்னலருகே நடமாட்டம் .... அவர்களின் நிழல்கள் எனது அறையில் விழுந்து விரைகின்றன.

ஒரு நிழல் மட்டும் நிலைத்து நிற்பதாய் நான் உணர்கின்றேன். நான் வெளியே எட்டிப் பார்க்கின்றேன். அந்தக் கிழவன் அந்தப் பெரிய மனுஷன் பிச்சைக்காரனைப் போன்ற அவன் கையேந்திக் கொண்டு நிற்கிறான். அவனை ஒரு பிச்சைக்காரன் என்ற சொல்லுக்கு ஆளாக்க என்னால் முடியவில்லை! அவன் ஒரு பரம்பரைப் பிச்சைக்காரன் அல்ல! அந்தப்பதத்துக்கே இடமளிக்க முடியவில்லை.

அவனது முகத்தில் தவழ்ந்து கொண்டிருக்கும் அந்த சாந்தமான பார்வை ஆயிரம் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

நான் ஒரு ஐந்து சத நாணயத்தைக் கொடுத்தேன்...

நீங்க நல்லா இருக்கணும்! அந்தப் பெரிய மனுஷன் என்னை ஆசீர்வதித்தான். பின் என்னைத் தொடர்ந்து பலர் சில்லறைகளைக் கொடுத்தனர். இந்தச் செயல் அந்த மனிதனை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

நீங்க எல்லாரும் சிரஞ்சீவியா வாழணும் அவன் திரும்பத் திரும்ப சொன்னான். இன்னும் இரண்டு நாளைக்கு அலைஞ்சித்திரியாம அக்கடானு இருப்பேன். நொண்டி நொண்டி பிச்சைகேட்டு அலையும் நிலையிலிருந்து இரண்டு நாட்கள் ஓய்வாக இருக்கப் போகிறேன் என்ற சந்தோஷம் அவனது வார்த்தைகளிலிருந்து விழுந்தது. நான் மகிழ்ந்து போனேன்.

சில நாட்கள் பெய்த மழைக்குப் பிறகு வெளியே வெய்யில் பிரகாசமாய் அடித்தது. எனக்கு ஆபீஸ் உள்ளே இருக்க முடியவில்லை. வெளி முற்றத்துக்கு வந்து விட்டேன். சுவரில் சாய்ந்திருந்தான். முதுமை தோய்ந்த அவனது முகத்தில் ஏக்கமும் ஒருவித கடுமையும் படர்ந்திருந்தது. சுவரில் சாய்ந்தபடி இன்னும் அப்படியே உட்கார்ந்திருக்கிறான். அவனுக்கு முன்னால் ஒரு குப்பைவாளி இருந்தது. வாளிக்குள்ளே சாப்பிட்டு எறிந்த வாழை இலைகள் சிதறிக் கிடந்தன. அழுகிய உணவின் துர்நாற்றம் காற்றோடு கலந்து வந்தது. வீச்சம் நிறைந்த குப்பைவாளியில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. நாய்கள் சில குப்பைவாளியைக் கிண்டுவதில் போர்க்கொடி தூக்கின. ஒன்றையொன்று எதிர்க்கின்ற உறுமல் பிச்சைக்காரனும் இப்படி உணவுக்காக குப்பைவாளியில் கையைப் போட்டு துளாவுவதையும் மனிதனுக்காக நாய்கள் விட்டுக்கொடுப்பதையும் பார்த்திருக்கின்றேன்.

ஆனால் இங்கே இந்த இடத்தில் இந்தக் கிழவன் இந்த நிலையில் எல்லாவற்றுக்கும் அப்பால் உயர்ந்து நிற்கின்றான். (EVEN IN THIS RESPECT ..... THE OLD MAN WAS UNIQUE) அவனது முகத்தில் ஒரு விசித்திரப் புன்னகை இழையோடுகிறது. அந்த தளர்ந்து போன உடலில் ஓர் ஆத்மகௌரவம் கம்பீரத்தோடு பிரகாசித்துக் கொண்டிருந்தது.

அவன் இல்லை. அவர்மேல் எனக்கு ஒரு மரியாதை படர்ந்தது! நான் பேச்சுக் கொடுத்தேன்.

நீங்க ஏதாச்சும் சாப்பிடலையா...? ஹி... ஹி.... பசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லைங்க ஐயாவ்! கால சாப்பாட்ட கொஞ்சம் சொணங்கி சாப்பிட்டேன். ஹி.. ஹி.. அவரது சிரிப்பில் கோடிக்கணக்கான மரியாதை தவழ்ந்தது.

நீங்க தோட்டத்துல ... இருக்குறீங்களோ? ஆமாம் ஐயாவ்! அப்ப சொந்தக்காரங்க நிச்சயமா இருப்பாங்கள்?

ஆமாங்க ஐயாவ்! எல்லாரும் இருக்காங்க... எனக்கு இரண்டு மவன்மாரும் ஒரு மவ பேரப்புள்ளைங்க எல்லாரும் இருக்காங்க! அப்ப அவங்களோட நீங்க இருக்கலாந் தானே? நா ஏன் அவங்கல்ல தங்கி இருக்கணும்? இதுக்கு முன்ன நா அப்படி இருந்ததுமில்ல. இனிமேலேயும் இப்பிடி இருக்கப் போறதுமில்ல! மற்றவர்களின் அனுசரனையுடன் வாழ விரும்பாத தன்மான உணர்வ அவரின் சூடான பதிலில் தெரிந்தது.

என்னா இருந்தாலும் இந்த வயசான காலத்துல நீங்க அண்டியிருக்கிறதுக்கு ஒங்களுக்கின்னு ஒரு எடம் இருக்கணுமில்லே? என் அபிப்பிராயத்தைக் கூறினேன்.

என்மவன்மார்களும், மவளும் ஆத்துக்கு அந்தப்பக்கம் இருக்காங்க ஐயாவ்! எங்க தோட்டம் வந்துசின்னத்தோட்டம்! பகல் நேரத்துல இப்பிடி ஊர சுத்திட்டு வருவேன். ராத்திரியிலே மாரியம்மன் கோயிலுக்கு வந்திருவேன்.

சின்னத்தோட்டதுல எவ்வளவ் காலமா இருக்கீங்க? பொறத்திலிருந்து இருக்கேன்! தேயிலக்கன்னு போடுறதுக்கு இந்த மலையலுக்கெல்லாம் எங்கப்பாருதான் கூனி அடிச்சாரு! நாந்தான் இந்த தோட்டத்துக்கு தேயிலக்கன்னு நட்டு வளர்ந்தவன்! இங்கு இருக்கிற ஒவ்வொரு தேயிலக்கன்னும் எனக்கு தெரியும்! ஒவ்வொரு மரமும் தெரியும்! ஒவ்வொரு கானுக்கட்டையும் தெரியும்! கிழவனார் மிகப்பெருமையோடு வார்த்தைகளை உதிர்த்தார்.

உழைப்பின் மகத்துவம் உழைப்பாளிக்குத் தான் தெரியும். அப்ப ... நீங்க இந்த தோட்டத்துலதான் பென்சன் வாங்குறீங்கனு நெனைக்கிறேன்! நான் பேச்சை இழுத்தேன்.

ஆமாங்க ஐயாவ்! நம்ம தொர... மாசம் பதினஞ்சி ரூவ்வா குடுக்குறாரு!

இன்னும் கொஞ்சம் கூட்டிக்கேட்டிருக்கலாம் தானே?

கேட்டேன் கூட்டிக் கொடுத்தா தோட்டம் கட்டுப்படியாகாதாம்! தொர சொல்லிட்டாரு அவர் உதடுகள் ஏளனமாக நகைத்தன.

அப்படியோ? நான் வருத்தப்பட்டேன். ஆமாங்க ஐயாவ்... சீவியம் பூராவும் இந்த தோட்டத்துக்காகப் பாடுபட்டேன். எனக்கு முந்தி எங்க அப்பாரு மழ வெய்யில்ன்னு பாக்காம ராவ் பகல்னு நெனைக்காம ஒழைச்சாரு, மாய்ஞ்சி, மாய்ஞ்சி இந்தத் தோட்டத்துக்கே ஒழச்சு மாண்டு போனாரு தோட்டத்துல ஒரு தம்பிடிகூட அவனுங்க அவருக்கு குடுக்கல்ல! அதுதான் என்னமோ சொல்லுவாங்களாம் வெள்ளைக்காரன் தயவு செவுத்துல ஒட்டின சுண்ணாம்பு மாதிரி அது எந்த நேரமோ உதுந்து கொட்டிப் போயிரும்.

அவர் மௌனமானார். மீண்டும் பேச்சை தொடர்ந்தார். ஓ... இந்தத் தோட்டத்துக்காக நானு எவ்வளவு ஒழைச்சி குடுத்திருப்பேன்! நானு நேர்மையான மனுசன்! நேர்மையான வேலக்காரன் னு அவுஹ சொன்னாஹ! நானு வயசாகி ஒடம்பு தளந்துபோனதும் அவுஹ புழிஞ்ச சக்கைய தூர வீசுறமாதிரி என்னைய வீசிப்புட்டாங்க.

அவர் குரல் கம்மியது.

ஒங்க சம்சாரத்தப் பத்தி ஏதாவது? அவுங்களும் சின்னத் தோட்டதுலதான் இருக்காங்களா? நான் தயங்கியபடி கேட்டேன். திடீரென அவர் முகத்தில் கருமை படர்ந்தது. அவர் மௌனமானார்.

அவ மாண்டு மடிஞ்சிட்டாளுங்க சாமீ! அவ உசுரோட இருந்திருந்தா நா இப்பிடி பிச்ச எடுக்கிற அளவுக்கு வந்திருக்கமாட்டேன்.

அவுங்க இளம் வயசிலேயே எறந்திட்டாங்களா?

இல்லீங்க ராசா! அவ கொஞ்சம் வயசுபோயித்தான் செத்தா நல்லோரு மவராசி! பாசமுள்ள பொம்பள! எங்க சீவியத்துல நாங்க ரெண்டுபேரும் சண்ட புடிச்சதே கெடையாதுங்க! அவ ஒரு போதும் என்னையத் தவிர வேற ஆம்பள மொகத்த பாத்ததேயில்லை! அதே மாதிரி நானும் ஒரு பொம்பள மொகத்த பாத்தது கெடையாது!

அப்போ நீங்க ரெண்டு பேரும் ஒரு சந்தோமான ஜோடின்னு சொல்லுங்க! என்று கிண்டலாகச் சிரித்தேன்.

ஆமாங்க ஐயாவ்! அவர் முகத்தில் ஓர் இன்ப மலர்ச்சி தவழ்ந்தது. நான் அவரை விடவில்லை பேச்சை தொடர்ந்தேன்.

அவுங்க ஒங்களுக்கு சொந்தமோ? மொறப் பொண்ணுங்க ஐயாவ்! எங்க அப்பாவூட்டு தங்கச்சி மவ! சொந்த அத்தமவ! பேரு பூங்காவனம்.

பூங்காவனம் அவர் கண்ணை மூடிக் கொண்டு துயரம் தோய்ந்த குரலில் மீண்டும் மீண்டும் அந்தப் பெயரை உச்சரித்தார்.

அவ என்ன வுட்டுட்டுப் போனதோட எனக்கு கெட்டகாலம் தொடங்கிருச்சி அவர் நா தளர்ந்தது. அவர் துயரப்படுவதை நான் விரும்பவில்லை. பேச்சை மாற்றிக் கொண்டேன்.

ஒங்க பேரு என்னாங்க பெரியவரே? சிவசாமிங்க ஐயாவ்! நல்லது சிவசாமி. நீங்க இந்தியாவுக்குப் போற நோக்கம் எதுவும் இருக்குதா? இந்தியாவுல எனக்கு என்னாங்க சாமீ இருக்கு? ஒரு புது ஊர்ல போயி இனிமே என்னால என்னாங்க செய்ய முடியும்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ சின்ன த்தோட்டத்திலேயே நீங்க கடைசி காலம் வரைக்கும் இருக்கப் போறீங்களா?

ஆமாங்க! எங்க தாய், தகப்பன் இங்கயே வாந்துமடிஞ்சி போனாங்க. நானும் இங்கயே பொறந்து வளந்து கண்ணாலமும் கட்டினேன்! இங்கதான் எம்புள்ளக்குட்டிகளும் பொறந்து வளந்ததுஹ! எம்பொஞ்சாதியையும் அந்தத் தேயிலைத் தூராலதான் அள்ளிவச்சேன். அந்த ஏழாம் நம்பர் மலையில எங்காயி கப்பன் பக்கன் பக்கத்துலதான் பூங்காவனமும் படுத்திருக்கா. என்னைக்காவது ஒரு நாளு நானும் கண்ண மூடிட்டா எம்மூடிட்டா எம்மவன்மாருங்க அவுங்க பக்கத்துல என்னையும் கொண்டு போயி வச்சிருவாங்க. நானும் ஓஞ்சிப் போய்ட்டேன். ரொம்ப நாளைக்கு இருக்க மாட்டன்.

சிவசாமி கிழவனார் குரல் தழுதழுத்தது.என் மனமும் நெகிழ்ந்து வேதனைப்பட்டது.

கடைசிக் காலத்தில் சிவசாமிக்கும் அவரைப் போன்ற எல்லா உழைப்பாளிகளுக்கும் இங்கே இதுதான் விதியும் கதியும் என்று என் மனம் உறுத்தியது. இவரைப் போன்ற எத்தனை உழைப்பாளிகள் இப்படி வீதியில் இழுத்து வீசப்பட்டிருக்கிறார்கள்? உழைப்பு சூறையாடப்பட்ட இன்னும் எத்தனைபேர் இப்படி வீதியில் இழுத்து வீசப்ட்டிருக்கிறார்கள்? உழைப்பு சூறையாடப்பட்ட இன்னும் எத்தனைபேர் இப்படித் தெருவுக்கு வரவிருக்கிறார்கள்? ஆமாம்... ஆமாம்.... இங்கே வருந்தி உழலும் இந்த ஆண்களும், பெண்களும் உழைக்க மட்டுமே பிறந்திருக்கிறார்கள்

(YES THE MEN AND WOMEN BORN TO LABOUR)

# எனது பழைய டைரியிலிருந்து

பொழுது போகாத நேரங்களில் என் பழைய டைரிகளை புரட்டிப் பார்ப்பது எனது வழக்கமாகும். பழைய டைரியிலிருந்து ... நான் குறித்து வைத்துள்ள தகவல்களை செய்திகளை படித்து, சுவைப்பது உண்டு.

அதனை மற்றவர்களும் படிக்க வேண்டும் அவாவில் இதனை தருகிறேன்.

மலையகப் பாடசாலைக்கு மந்திரி வரப் போகின்றார். அதனால் மாணவ மணிகள் நீட்டாக அதாவது பளீரன்று வெண்ணிற ஆடைகளுடன் சப்பாத்துகளுடன் வர வேண்டும் என அதிபர் கட்டளையிடுகின்றார்.

ஒரு தோட்டத் தொழிலாளியின் மகன். தந்தையை இழந்தவன். தாயின் உழைப்பினால் பசியையும் போக்கி, படிப்பையும் தொடர்கிறான்.

மந்திரி பாடசாலைக்கு விஜயம் செய்த பொழுது வெறும் கால்களுடன் பாடசாலைக்கு வர முடியாததால் வீட்டில் தங்கி விடுகிறான். மறுநாள் பாடசாலைக்கு வந்த மாணவனை அதிபர் அடித்த அடியினால் ..... மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நிலை.இதன் ஞாபகமாக நான் படித்த பழைய கவிதை ஒன்றினை குறித்து வைத்திருக்கிறேன்.

**மதிப்புள்ள வாத்தியாருக்கு**
**நேத்து ராத்திரி என்னோட அப்பாவை**
**யாரோ சாதிச் சண்டையிலே**
**அடிச்சு கொன்னு எரிச்சிட்டாங்க...**
**அம்மாவுக்கு உடம்பு சரியில்லாம**
**தர்ம ஆஸ்பத்திரியிலே**
**படுத்துறுக்காங்க**
**வேலை தேடிப் பட்டணம் போன**
**அண்ணன் இன்னமும்**
**வீடு திரும்பலே**
**வயசுக்கு வந்த என்னோட**
**அக்காவையும்**
**நாலு நாளா காணல**
**என்னோட டவுசர்**
**பின் பக்கம் கிளிஞ்சி போயிடுச்சு**
**அதனால் ஐயா**
**இன்று நம் பள்ளியிலே**
**நடைபெறும் சுதந்திர தின விழாவிலே**
**கொடியேத்த மந்திரி வரும் போது**
**என்னால வர முடியாது.**
**இப்படிக்கு**
**கீழ்படிந்துள்ள மாணவன்**
**கே. குப்புசாமி**

கவிஞர் என். அறிவுமதியின் அந்த கவிதை தோட்டப்பாடசாலை மாணவனை நினைவூட்டபடுகிறதல்லாவா?

கடந்த மாகாண சபை தேர்தலின் போது கடைசி நேரத்தில் தான் வெற்றி பெற வேண்டும் என்றால் ஜாதியை சொல்லியே ஓட்டு வேட்டையாடினார்கள். அந்த சம்பவத்தை நினைத்ததற்கு காரணம் கவிஞர் வாலியின் வாக்காளப் பெருமக்களே.. என்ற கவிதைதான் தேர்தல் நேரத்தில் இந்த கவிதையை நீங்களும் படியுங்களேன்.

**நீங்கள் என்னைத்**
**தேர்ந்தெடுத்தால்**
**ஜாதிகளை ஒழிப்பேன்.**
**வீதிகளில் உள்ள**
**ஜாதிகளின் பெயர்களை**
**அழிப்பேன்**
**ஜாதி என்ற வார்த்தை உள்ள**
**பக்கத்தை அகராதியிலிருந்து**
**கிழிப்பேன்.**

**நீ அந்த ஜாதி நான் சிந்த**
**ஜாதி**
**என்று பேசுவோரால் தான்**
**தேசம் கெட்டு விட்டது! எனவே**
**ஜாதியில்லாத சமுதாயத்தை**
**அமைக்க**
**எனக்கே ஓட்டுப் போடுங்கள்**
**நினைவில் இருக்கட்டும்**
**நான் உங்கள் ஜாதிக்காரன்!**

இந்த நேரத்தில் குன்றில் குரல் சஞ்சிகையை பிரசுரித்த கவிதை ஞாபகத்திற்கு வருகிறது. டைரியை புரட்டுகிறேன்.

இன்னும் வரும்

அந்தனி ஜீவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்

## மனித உரிமை கல்விக் கையேடு



மனித அபிவிருத்தி தாபனம் அண்மைக்காலமாக மனித உரிமைப் பற்றிய விழிப்புணர்வையும் கல்வியையும் கிராமிய தோட்ட மக்களிடையே பரப்பி வருகின்றது. இவ்வாறான கலந்துரையாடல்கள் கருத்தரங்குகள் பயிற்சி பட்டறைகளுக்கு சென்று வறுமைப்பட்ட மக்களுடன் இணைந்திருக்கும் பொழுது பேசும் அல்லது பழகும் பொழுது மேற்படி கேள்விகள் எழுகின்றன.

தனிப்பட்ட மனிதர்களுக்கிடையே குடும்பங்களில் அல்லது சமூகத்தில் மனித உரிமைகள் மீறப்படும் போது மக்கள் தங்களுடைய உரிமைகள் பற்றி சிலர் அறிந்திருக்க பலர் தெளிவில்லாமல் இருக்கின்றனர் அல்லது சகித்துக் கொள்கின்றனர் அல்லது அம்மனித உரிமை மீறல்களுக்கு அவர்களே காரணமாகின்றனர். இவ்வேளைகளில் மனித உரிமை சாசனம் பற்றி மக்களிடம் கலந்துரையாடி இதை இலகுபடுத்தி சாதாரண மொழி நடையில் சிறுவர்களும் பெரியவர்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் கொண்டு செல்ல வேண்டிய தேவையும் உணர்வும் ஏற்பட்டன. அதன் விளைவே இந்த கையேடாகும்.

1948 டிசம்பர் 10 ம் திகதி ஐ. நா. பொதுசபை மனித உரிமை பிரகடனத்தை வெளியிட்ட பின்பு சபையானது நாடுகள் அல்லது ஆள்பலங்களின் அரசியல் அந்தஸ்த்துக் காரணமாக எவ்வித வேறுபாடும் இல்லாவகையில் எல்லா பாடசாலைகளிலும் கல்வி நிறுவனங்களிலும் பரப்பவும் காட்சிக்கு வைக்கவும் அங்கத்துவ நாடுகள் யாவற்றையும் கேட்டுக் கொண்டது. இவ்வாறு பி.பி சிவவபிரகாசம் குறிப்பிடுகின்றார்.

தொடர்பு

**Human Development Organization**
**37 Mulgompola Road Kandy**


## குன்றின் குரல்

பொறுப்பாசிரியர்
ஜே. ஜேஸ்கொடி

ஆசிரியர்
அந்தனி ஜீவா

ஆசிரியர் குழு
ஜே. பிரான்சிஸ்
பி. பி. சிவப்பிரகாசம்
செல்வி செ. கோகிலவர்தனி

தொடர்புகளுக்கு
குன்றின் குரல்
தோ. பி. கூ. செ.
30, புஷ்பதான மாவத்தை
கண்டி
✆ 08-222955


## மலையக மாணிக்கங்கள்



இலங்கையின் தேயிலைக் காட்டின் உரிமைக்குரல்களாக வாழ்ந்த ஒளி விளக்குகளைப் பற்றி எழுதி வெளியிடப்பட்டுள்ள இந்நூல் அந்த மண்ணுக்காக உழைத்தவர்களைப் பற்றி அறிய வாய்ப்புத் தருகிறது. குறிப்பாக இலங்கையில் வாழும் இளைய தலைமுறையினருக்குப் பயனுள்ள நூல் இது.

இவை எல்லாவற்றையும் விட மலையக கலை இலக்கிய வளர்ச்சிக்காகப் பெரும் பணியாற்றி வரும் கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியரான இவர் மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்த முன்னோடிகளைப் பற்றி எழுதிய மலையக மாணிக்கங்கள் என்ற இந்த நூல் இப் பெரியார்கள் பற்றி அறியக் கூடிய முறையில் உள்ளது. பன்னிரண்டு பேரைப் பற்றி அறியக் கூடிய முறையில் உள்ளது. பன்னிரண்டு பேரைப் பற்றி இந்நூலில் எழுதியுள்ளார்.

திருமதி மீனாட்சி அம்மையார் - தேசபக்தன் கோ. நடேசய்யார் - பெரியார் பெரி சுந்தரம் - தேசிகர் இராமானுஜம் - திவான் பகதூர் ஐ. எக்ஸ். பெரேய்ரா - ஜோர்ஜ் ஆர். மோத்தா - மலைநாட்டுக் காந்தி ராஜலிங்கம் - தளபதி வி. கே. வெள்ளையன் - மக்கள் கவி மணி சி. வி. வேலுப்பிள்ளை - தொழிற்சங்கத் தலைவர் ஏ. அஸீஸ் - அஞ்சா நெஞ்சன் சோமசுந்தரம் - அசோகா பி. டி. ராஜன் ஆகியோர்களின் சேவைகளைத் தனக்கே உரிய பாணியில் எழுதியிருக்கிறார்.

நூலாசிரியர் அந்தனி ஜீவாவின் எழுத்துக்களில் ஒரு வித விறுவிறுப்பைத் தரிசிக்கலாம்.

"ஈழுகேசரி"

*தொடர்பு*
துரைவி
85, இரத்தினஜோதி மாவத்தை,
கொழும்பு - 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கலண்டர் 1999

### ஜனவரி

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### பெப்ரவரி

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |

### மார்ச்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### ஏப்ரல்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

### மே

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### ஜூன்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

### ஜூலை

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### ஆகஸ்ட்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### செப்டெம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

### அக்டோபர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### நவம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

### டிசம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

| | | |
|---|---|---|
| ஜனவரி | 1 | வருடப்பிறப்பு |
| ஜனவரி | 7 | முல்லோயா கோவிந்தன் சுட்டுக் கொல்லப்பட்ட தினம் |
| ஜனவரி | 14 | கோ. நடேசய்யர் பிறந்த தினம் |
| ஜனவரி | 14 | தைப்பொங்கல் |
| பெப்ரவரி | 4 | தேசிய தினம் |
| பெப்ரவரி | 11 | மலைநாட்டுக் காந்தி இராஜலிங்கம் நினைவ தினம் |
| மார்ச் | 8 | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் | 26 | உலக நாடக தினம் |
| ஏப்ரல் | 13,14 | தமிழ், சிங்கள புத்தாண்டு |
| ஏப்ரல் | 26 | தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்கு குரல் கொடுத்த ஐ. எக்ஸ். பெரைரா நினைவு தினம் |
| ஏப்ரல் | 29 | இலங்கை இந்திய காங்கிரசின் ஸ்தாபகர்களில் ஒருவரான ஜனாப். ஏ. அஸீஸ் நினவை தினம் |
| மே | 1 | உலக தொழிலாளர் தினம் |
| மே | 12 | தொழிற்சங்கவாதி கே. ஜி. எஸ். நாயர் நினவை தினம் |
| மே | 15 | தியாகி சிவனு லெட்சுமணன் நினவை தினம் |
| ஜூன் | 4 | டி. இராமானுஜம் நினைவு தினம் (முன்னர் அளுத்நுவர எம். பி. கண்டி மாநகர துணை மேயர்) |
| ஜூன் | 11 | பெரியார்பி. டி. ராஜன் நினைவு தினம் |
| செப்டெம்பர் | 3 | மலையகக் சிறுகதைச் சிற்பி என். எஸ். எம். ராமையா நினைவு தினம் |
| செப்டெம்பர் | 3 | கோ. நடேசய்யரின் தேசபக்தன் (1924) முதல் இதழ் பிரசுரமானது. |
| செய்டெம்பர் | 12 | மகாகவி பாரதி நினைவு தினம் |
| செப்டெம்பர் | 18 | மலையக கவிதைமுன்னோடி அருவாக்கி அப்துல்காதர் நினைவு தினம் |
| நவம்பர் | 7 | தேசபக்தன் கோ. நடேசய்யர் நினைவு தினம் |
| நவம்பர் | 8 | தொழிற்சங்க மேதை ஜோர்ஜ் ஆர். மோத்தா நினைவு தினம் |
| டிசம்பர் | 2 | தொழிலாளர் தேசியசங்க ஸ்தாபகர் வி. கே. வெள்ளையன் நினைவுதினம் |
| டிசம்பர் | 12 | துரைவி பதிப்பக துரை விஸ்வநாதன் நினைவ தினம் |

## குன்றின் குரல்

*Published by Coordination Secretariat for Plantation Areas 30, Puspadana Mawatha, Kandy.*
Printed by ***Graphic Land***, Kandy. Tel : 08 - 232978, 074 - 474691

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org